வ. வே. சு. ஐயர் அவர்கள் நினைவு
நூற்றாண்டு விழாச்சிறப்பு வெளியீடு.

ஐயர் அவர்களின்
வரலாற்றுச் சுருக்கமும்
கம்பராமாயணச் சிந்தனையும்.



வ.வே.சு.ஐயர்

ஆசிரியர்:
டாக்டர் T. வைத்தமாநிதி M. A., B. T., Phd.,

வெளியீடு:
நெல்லை மாவட்டக் கம்பன் கழகம்
பாளையங்கோட்டை - 627002.

நெல்லை மாவட்டக் கம்பன் கழகம்

பாளையங்கோட்டை.

புரவலர்:	திரு.	பி. ஸ்ரீ. ஆசாரியா அவர்கள் விட்டலபுரம்
	,,	எம். எஸ். சுந்தரம் பிள்ளை பாளை.
தலைவர்:	திரு.	K. S. கிருஷ்ண ஐயங்கார் M. A.
துணைத்தலைவர்:	,,	T. அய்யாச்சாமி B. A, B. L.
செயலாளர்:	,,	M. சுப்பிரமணியம்
இணைச்செயலாளர்:	,,	S. ஹரிஹரன்
பொருளாளர்:	,,	R. முருகையா B. A.

வ. வே. சு. ஐயர் அவர்கள் நினைவு

நூற்றாண்டு விழாச்சிறப்பு வெளியீடு.

ஐயர் அவர்களின் வரலாற்றுச் சுருக்கமும் கம்பராமாயணச் சிந்தனையும்.

933

ஆசிரியர்:

டாக்டர் T. வைத்தமாநிதி M. A., B. T., Phd.,

ஆதித்தனார் கல்லூரி – திருச்செந்தூர்.

வெளியீடு:

நெல்லை மாவட்டக் கம்பன் கழகம்

பாளையங்கோட்டை - 627002.

21—3—81ல் காரைக்குடி கம்பன் விழாவின் போது, நாட்டரசன் கோட்டை கம்பன் அருட்கோயிலில் நடந்த .வ. வே. சு. ஐயர் வாழ்த் தரங்கில் "கம்பராமாயணக் காவலர்" திரு கம்பன் அடிப்பொடி அவர்களால் வெளி யிடப்பட்டது. முதல் பிரதியை திரு ஐயர் அவர் களின் புதல்வர் டாக்டர் திரு வ. வே. சு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

முதற் பதிப்பு 1981

விலை ரூ.1-50

அச்சிட்டோர்:
ஸ்ரீ கோபாலகிருஷ்ண அச்சகம்,
திருநெல்வேலி சந்திப்பு.

படையல்

எனது பேராசிரியர் இலக்கிய மேதை,

கம்பன் கலைச் செல்வர், செந்தமிழ்ச்செம்மல்

அமரர்

உயர்திரு அ. சீநிவாசராகவன் அவர்கள்

பொன்னார் திருவடிகளுக்கு

தி. வைத்தமாநிதி

நெல்லை மாவட்டக்

கம்பன் கழகம்



பாளையங்கோட்டை.

எங்கள் நோக்கமும், பணியும்.

கம்பராமாயண எழில் மண்டபம் கட்டப்பட்டு, அதில் கம்பருடைய ஐம்பொன் திருவுருவச் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டு, காரைக்குடி, திரு. கம்பனடிப் பொடி அவர்கள் ஆசியுடன், கம்பராமாயண மேதை பி. ஸ்ரீ. ஆசாரியா அவர்கள் 4—10—76 தேதி இக்கழகத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

1. குறிக்கோள்:–

"ஸ்ரீ இராமபிரானுடைய காசில் கொற்றத்தையும், கம்பருடைய புகழையும் பரப்பிக், கன்னித் தமிழ் வளர்ப்பது."

2. ஆற்றி வரும் பணிகள்:-

அ) ஒவ்வொரு ஞாயிறுதோறும் மாலை 7-00 மணி முதல் 7-45 வரை, வால்மீகி — கம்பர் — துளசிதாசர் — இராமாயணங்களில் கலந்துரையாடல், அதன்பின் 8-45 வரை சிறப்புச் சொற்பொழிவு நடந்து வருகிறது.

ஆ) நூல் நிலையம் ஒன்று நிறுவப்பட்டு அதில் கம்பராமாயண ஆராய்ச்சி நூல்களும், இந்து சமய பக்தி நூல்களும், இடம் பெற்றிருக்கின்றன. கம்பன் ரசிகர்களும், பொது மக்களும் படித்துப் பயன் பெறுகிறார்கள்.

இ) கம்பராமாயண அடிச்சுவடுகள், ஆராய்ச்சி என்ற பணியில் 1979 ஆம் ஆண்டு மே மாதம் 24 தேதி முதல் ஜுன் மாதம் 6 ஆம் தேதி வரை இக்கழகத்தின் உறுப்பினர்கள் இலங்கை பயணம் மேற்கொண்டு, அங்கு கண்டறிந்த ஆராய்ச்சி பற்றி ஒரு புத்தகம் வெளியிடப்பட்டது. அடுத்து, அயோத்தி, மிதிலை ஆராய்ச்சிப் பயணம் மேற்கொள்ள ஏற்பாடு ஆகிறது.

ஈ) தமிழை வளர்க்கும் பணியில் கல்லூரி, பள்ளி, மாணவ மாணவியருக்கு தமிழில் முதலாவதாக தேர்ச்சி பெறுகிறவர்களுக்குக் கம்பராமாயணம் சம்பந்தப்பட்ட புத்தகங்கள் பரிசாக வழங்கப்படுகிறது.

உ) கம்பன் காவியத்தை பரப்பும் வகையில் புத்தகங்கள் வெளியிடும் முயற்சியில் முதல் படியாக திரு. பி. ஸ்ரீ. ஆசாரியா அவர்களும், திருமதி. சரசுவதி ராமனுதன் எம். ஏ. அவர்களும் இணைந்து எழுதிய "கம்பன் கலைக் கோயிலுக்கு ஓர் கைவிளக்கு" என்ற புத்தகத்தை சென்ற ஆண்டு பாண்டிச்சேரி கம்பன் விழாவில் வெளியிடப்பட்டது. ஏற்கனவே அருள்மிகு ராஜகோபால சுவாமி கோவில் ஸ்தல புராணமும், திருப்பாவை, திருவெம்பாவை நூல்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன.

ஊ) வ. வே. சு. ஐயர் நூற்றுண்டு விழாவை முன்னிட்டு ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிறு தோறும் அன்னரின் தமிழ்த்தொண்டு பற்றியும், கம்பராமாயண ரசனை பற்றியும், டாக்டர் T. வைத்தமாநிதி M. A., B. T,, PhD., அவர்கள் சிறப்புரையாக நிகழ்த்துகிருர்கள். அதைப் புத்தக வடிவில் காரைக்குடி கம்பன் விழாவில் வெளியிடப்படுகிறது.

3. தொண்டு:-

அ) தன் வாழ்நாள் முழுவதும் கம்பனுக்கே தொண்டு செய்து தனது தள்ளாத வயதிலும் அதே ஆர்வத்துடன் கம்பனுக்கும், தமிழுக்கும், பணி செய்து வரும் 95 வயது நிரம்பிய மூதறிஞர் திரு. பி. ஸ்ரீ. ஆசாரியா அவர்களுக்கு 4—10—76 தேதி முதல் மாதம் ரூ. 100/-

(ரூ. நூறு) வயோதிக கால உதவித் தொகையாகவும், அன்னார் ஆயுள் வரை போக்குவரத்து மற்றும் மருத்துவ வசதியும், இக்கழகம் வழங்கி வருகிறது.

ஆ) கம்பன் கழகத்தின் பெயரில் பொது மக்களுக்கு பேருந்து பயணிகள் தங்கும் நிலையங்கள் அமைத்துக் கொடுத்து பணி செய்து வருகிறது.

4. நன்றி:-

இந்நூலுக்கு ஆசியுரை வழங்கிய "கம்பராமாயண மேதை" மூதறிஞர். பி. ஸ்ரீ. அவர்களுக்கும், அணிந்துரை நல்கிய "கம்பராமாயணக்காவலர்" திரு. கம்பனடிப் பொடி அவர்களுக்கும், நூல் ஆசிரியர் டாக்டர் தி. வைத்தமாநிதி M. A., B. T., Phd, அவர்களுக்கும், நல்ல முறையில் அச்சிட்டு தந்த ஸ்ரீ கோபாலகிருஷ்ண அச்சகத்தாருக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி.

5. வேண்டுகோள்:-

இக் கழகத்தின் வராந்திர கலந்துரையாடல் நிகழ்ச்சியில், வால்மீகியாகப் பணிபுரியும் தலைவர் திரு. K. S. கிருஷ்ணய்யங்கார் M. A., அவர்களின் வடமொழிப் புலமையும், அடக்கமும், கம்பதாசனாக கம்பன் தொண்டுக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்ட எங்கள் திரு. தி. சு. ஆறுமுகம் அவர்களின் கம்பீரமான பேச்சும் அதில் பொதிந்து கிடக்கும் ஆழமான கருத்துக்களும், துளசிதாசருக்குத் தாசனாக பணிபுரியும் திரு. T. அய்யாசாமி அவர்களின் பேச்சாற்றலில் உள்ள பக்திச்சுவையும் உயர்ந்த கருத்துக்களும், இன்று போல் என்றும் கம்பன் ரசிகர்களுக்கு கிடைத்திட ஸ்ரீ ராமபிரான் அருளும், கம்பர் ஆசியும், வேண்டி வணங்கிப் பிரார்த்திக்கிறோம்.

கம்பன் வாழ்க !

கம்பன் புகழ் வாழ்க !!

கன்னித் தமிழ் வாழ்க !!!

கம்பன் கழகத்தார், பாளை.

கம்பன் அடிப்பொடி அவர்களின்

அணிந்துரை

வரகனேரி வெங்கடேச சுப்பிரமணிய அய்யர் என்னும் வ. வே. சு. அய்யர் அவர்கள் ஒரு வீரவிளக்கு; பன்மொழிப் புலவர், சிறுகதை முன்னேடி; தேசபக்த சிகாமணி; கம்பனை உலகறியச் செய்த மாமேதை; ஒழுக்க சீலர்; தியாகச் செம்மல்; அவர் தம் வீர வாழ்க்கையும் மாண்புறு தொண்டும் வியக்கத் தக்கவை; திருச்சியில் கல்லூரிப் படிப்பை முடித்துப் பிளீட ராகத் தொழில் புரிந்து, பின்னர் ஒன்று விட்ட மைத்துனரின் விருப்பத்தால் ரெங்கூன் சென்று, அங்கு ஆங்கிலேயப் பாரிஸ் டரிடம் உதவியாளராகப் பயிற்சிபெற்றுப்பாரிஸ்டர் ஆகக்கருதி லண்டன் சென்றதும், பாரிஸ்டராகத் தேர்ச்சி பெற்றும் ராஜ விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொள்ள மறுத்துவிட்டதை எல்லாம் எண்ணினல், அவர்தம் தேசப்பற்று நம்மை எல்லாம் வியப்பிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்த்தும்.

லண்டனில் இந்தியா ஹவுஸில் வீரசவர்க்கார்—டாக்டர் ராஜன் முதலியவர்களுடன் கூடி இவர் ஆற்றிய மயிர் கூச் செரியும் தீரச்செயல்களை எல்லாம் வருணிக்க வார்த்தைகள் இல்லை. துப்பறிவதில் மிக்க திறமையுள்ளவர்கள் எனப் புகழ்ந் தோதப்படும் ஸ்காட்லாண்ட் யார்டு போலீசுக்கும் கடுக்காய் கொடுத்த அய்யரின் நுண்மான் நுழைபுலம் எண்ணி எண்ணி இரும்பூ தெய்தற்பாலது.

பெரும் புரட்சிக்காரராக மலர்ந்த அய்யர், காந்தியடிகள் தொடர்பால் அகிம்சையாளராக முற்றும் மாறிச் சாந்த சீல ராய்க் காட்சி கொடுத்த அந்தப் புனித—காம்பீரியத் திருஉரு இன்றும் என் கண்முன் நிற்கிறது. அத்தகைய பெருமகனரின் வரலாற்றை — கம்பராமாயணச் சிந்தனையைப் பற்றித் தெளி வாகவும், விளக்கமாகவும் பேராசிரியர் டாக்டர் T. வைத்தமாநிதி அவர்கள் எழுதியுள்ளார்கள். இந்நூல், நெல்லை மாவட்டக் கம்பன் கழகத்தில் அவர்கள் நிகழ்த்திய தொடர் சொற்பொழி வின் சாரமேயாகும். இதை ஆக்கிய டாக்டர் வைத்தமாநிதி அவர்களையும், தங்கள் நாட்டுப்பற்று, தெய்வப்பற்று, மொழிப் பற்று, கம்பன் பக்தி முதலியன எல்லாம் புலப்படுமாறு

மிக்க சிரத்தையுடன் இதை வெளியிட்டு உபகரிக்கும் நெல்லை மாவட்டக் கம்பன்கழகத்தாரையும், சிறப்பாக அதன் ஜீவனாக விளங்கும் வள்ளல் M. S. சுந்தரம் பிள்ளை அவர்களையும் மன மார, வாய்குளிர வாழ்த்தி மகிழ்கிறேன்.

வாழ்க கம்பன் புகழ்!

வளர்க வ. வே. சு. கொற்றம்:

காரைக்குடி.
26—2—81

அன்பன்
கம்பன் அடிப்பொடி.

மூதறிஞர் பி. ஸ்ரீ. யின்

ஆசியுரை.

★

உலக மகாகவி கம்பன் புகழ் பரப்பிக் கன்னித் தமிழ் வளர்க்கத் தொடங்கப் பெற்ற நெல்லை மாவட்டக் கம்பன் கழகம், கடந்த நான்காண்டு காலம் சிறப்புடன் பணியாற்றி வருவது யாவரும் அறிந்ததே. ஆர்வமிக்க நிர்வாகத்தினரால் வாராந்தரக் கலந்துரையாடல், சிறப்புச்சொற்பொழிவு, வருடாந்தரத் தொடர்ச் சொற்பொழிவுகள் நன்ருக நடந்து வருவதைப் பலரும் கண்டு களிக்குமாறு கம்பன் திரு உருவச் சிலையைத் திறந்து கழகத்தை தொடங்கி வைத்தவன் என்ற முறையிலும் கழகப் புரவலன் என்ற முறையிலும் மகிழ் வெய்துகிறேன்.

கம்பனுக்கும் தமிழுக்கும் ஆற்றும் பணியாக நல்ல நூல்களை வெளியிடுவதுடன், தமிழ் அறிஞர்களை ஆதரித்து வருவது மெச்சத் தக்கதே. என் வாழ்வின் பெரும் பகுதியைக் கம்பனுக்கும் தமிழுக்கும் தொண்டு செய்வதிலேயே கழித்துவிட்டு எனது மூப்பிலே பாளையை அடுத்த, சொந்த ஊரான விட்டலபுரத்தில், பொருளாதார நெருக்கடியில் கஷ்ட ஜீவனம் நடத்த நேர்ந்தது. சுமார் நாலு வருடங்களுக்கு முன் யாரும் எதிர்பாராத வகையில் நெல்லை மாவட்டக் கம்பன் கழக முக்கியஸ்தர்கள் தொடக்க விழாவில் என்னைப் பங்கேற்கச் செய்து பெருமைப்படுத்தினர். இராமன் திருவருளாலும் கம்பனுடைய ஆசியாலும் அன்றிருந்து மாதந்தோறும் போதுமான உதவித் தொகை தருவதுடன் வேண்டிய வைத்திய வசதிகளையும், வாகன வசதிகளையும் கம்பன் கழகத்தினர் செய்து தருகிருர்கள். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி

காரைக்குடிக் கம்பன் விழாவில் சென்ற ஆண்டை லட்சிய கலாயோகி வ. வே. சு. ஐயரின் விழாவாக அநுஷ்டிக்கும்படி "கம்பராமாயணக் காவலர்" கம்பன் அடிப்பொடிகளின் வேண்டுகோளுக்கிணங்க, நெல்லை மாவட்டக் கம்பன் கழகம் மாதக் கடைசிச் சொற்பொழிவை வ. வே. சு. ஐயரைப் பற்றியது ஆக்கியது. டாக்டர் திரு. T. வைத்தமாநிதி M. A. B. T., Phd. அவர்கள் நிகழ்த்திய சொற்பெருக்கை நூல் வடிவில் தருவதே இந்த வெளியீடு. நான் பார்த்துப் பழகிய வ. வே. சு. ஐயரை, திரு. வைத்தமாநிதி படித்துச் சுவைத்து

தக்கதோர் ஆய்வு முறையில் எளிய இனிய நடையில் அழகுறத் தந்திருக்கிறார்கள்,

கம்பனைக் கற்கும் முறையில் நான் குருவாக ஏற்றுக் கொண்ட வ. வே. சு. ஐயர் பற்றிய நூலுக்கு முன்னுரை எழுதும் பேறு பெரும் பேறு ஆகும். எனது நூலொன்றில் குறிப்பிட்டதைப் போல், எவ்வாறு இராமனைக் கண்ட சுக்கிரீவன் படிப்படியாக மூன்று நிலைகளில் (ஆசை துறந்த அதிவீரன், லட்சிய புருஷன், பரம் பொருள்) இராம தரிசனம் செய்ததாகக் கம்பன் காட்டுவானோ அவ்வாறே நானும் வ. வே. சு. ஐயரைப் புரட்சி வீரராகவும், லட்சியப் புலவராகவும், குழந்தை உள்ளம் படைத்த மாமுனியாவும் காணும் பேறு பெற்றேன். "கம்பன் கல்வி" என்ற சோதனையில் இவர் கண்ட வெற்றி நிச்சயமானது, நிரந்தரமானது. கம்பனது கவிச் சிறப்பத்திறனை இவர் காட்டிக் கம்பன் திறனாய்வுக்கு ஆழ்ந்தகன்றதோர் அடிப்படை அமைத்துள்ளார். இதை மறுக்கவோ, மறக்கவோ முடியாது. கம்பனை மகரிஷி வ, வே. சு. ஐயர் மீண்டும் கண்டு பிடித்துக் காட்டிய சாதனை புதுயுகத்தை உருவாக்கும் ஒரு பணி ஆகும்.

பேராசிரியர் டாக்டர் திரு. வைத்தமாநிதி இந்நூலில் கம்பன் உலகக் கவிஞர் வரிசையில் எவ்வாறு முதலிடம் வகிக்கிறான் என்பதைத் தன் செறிந்த ஆய்வினால் அறுதியிட்டு ஆணித்தரமாகக் காட்டும் பாணி பெரிதும் போற்றத்தக்கது.

விடுதலை இயக்கத்தில் திரு ஐயரின் பெயரும் சாதனைகளும் பொன் எழுத்துக்களில் பொறிக்கத்தக்கன. தமிழின் மறுமலர்ச்சிப் புதுயுக வரலாற்றில் இவரது தேசிய இலக்கியச் சாதனைகள் அபாரமானவை.

வாழ்க வ. வே. சு. புகழ்!

அன்பன்

விட்டலபுரம்
1—3—81

பி. ஸ்ரீ.

ஸ்ரீ வ. வே. சு. அய்யர்

தோற்றம்: 2—4—1881 மறைவு: 3—6—1925



வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர், வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

The Householder who liveth as he ought to live
will be looked upon as a God among men.

—Translation by V. V. S. Iyer.

வ. வே. சு. ஐயர்
வரலாற்றுச் சுருக்கம்

"வ. வே. சு. ஐயர்" — என்ற பெயர் இந்த பாரத தேசத்தின், பெருமக்கள் வரலாற்றில் இடம் பெற்றுள்ள புண்ணியப் பெயர், ஆம்; தந்நலமற்ற தேசத்தொண்டு, ஒப்பற்ற தியாகம் மலையென வளர்ந்து நின்ற கல்வி, பன்மொழி யறிவு கலக்கமே காணாத நெஞ்சுரம், மனவளத்தோடு போட்டியிட்டு வளர்ந்து நிமிர்ந்த உடல் வளம் — ஆகிய இவை அனைத்தும் ஒன்றாகத் திரண்டு வந்த தன் மயமே வ. வே. சு. ஐயர்.

நாற்பத்து நான்கு யாண்டுகளே வாழ்ந்து மறைந்த இப்பெரியாரின் வாழ்க்கையின் வெற்றியை எண்ணிப்பார்த்தால் அது ஒரு வியப்பூட்டும் அநுபவமாகும். வ. வே. சு. ஐயர் அவர்களை சரித்திரம் படைத்த தேசபக்தர் என்று பார்ப்பதா? அல்லது, இலக்கிய நயன் நுகர்ந்து பரப்பிய தமிழ்ச் செம்மல் என்று கருதுவதா? அல்லது பன்மொழி வளங்கண்டு துய்த்து உயர்ந்த குன்றிலிட்ட விளக்கு என மதிப்பிடுவதா? — இப்படித் தான் அவரது வாழ்க்கையைப்பற்றி அறிய முயல்கின்ற நம்மை அறைகூவி நிற்கிறது 'வ. வே. சு.' என்ற பெயர்.

அதிகாரம், பதவி, புகழ் ஆகியவற்றை அரசியல் லாபங்களாகத் திட்டமிட்டுப் பெறச் சூழ் நிலைகளை உருவாக்கி, அல்லது கிடைத்த வாய்ப்பின் காரணமாகத் தன்னைத்தானே' 'தலைவன்' என்ற நிலைக்கு உயர்த்திக்கொள்ளும், மலிவான அரசியல் சூழ்ச்சிகள் மிகுந்துள்ள, இந்த நூற்றாண்டின் மத்தியில் இருந்து நமது தேச விடுதலை இயக்கத்தில் அருந்தொண்டாற்றிய வ. வே. சு ஐயர் போன்ற பெருமக்களை எண்ணிப் பார்க்கும் போது, இப்படிப்பட்டவர்களும் வாழ்ந்தார்களா என்றே அதிசயிக்கத் தோன்றுகிறது.

இலட்சிய வேகத்தையே உயிர்த்தத்துவமாகக் கொண்டு செயலாற்றி, தம் பேராற்றலையும் உயர்வையும் வெளிப்படுத்திய பல தீரர்களை, இந்தியா, விடுதலை அடைவதற்கு முன்னர் ஈன்று தந்துள்ளது. அவர்களுள் வ. வே. சு. ஐயரும், பாரதியும்

வ. உ. சியும், சுப்பிரமணியசிவாவும் நிலைத்த புகழுக்குரியவர்கள் தனக்கென வாழாது, பிறர்க்குரியாளராக வாழும் நெறியே செம்மையான நெறியெனக்கொண்டு வாழ்ந்த வ. வே. சு. ஐயர் அவர்களின் வாழ்க்கைச் சரிதத்தைப் பயிலும் போது, நம்மால் இரண்டு தீர்மானமான கட்டங்களைக் காண முடிகிறது.

ஒன்று வ. வே. சு. ஐயர் அவர்கள் பாரிஸ்டர் படிப்புக்காக லண்டன் சென்று பின் அங்கிருந்து நடத்திய வாழ்க்கை, மற்றது, பிரிட்டிஷ் உளவாளிகளி—மிருந்து தப்பி இங்கிலாந்தைவிட்டு வந்து பிரெஞ்சு—இந்தியப் புதுவையில் வாழ்ந்த வாழ்க்கை. இந்த இரண்டும் ஒரே மனிதனின் வாழ்க்கைதான் என்றாலும், அவற்றுக்குள்ளே அழுத்தமானதொரு மாற்றம் நிகழ்ந்திருப்பதைக் காணலாம். இந்த மாற்றத்தின் நிச்சயமான வெளிப்பாடுதான், வ. வே. சு. ஐயர் அவர்கள் வாழ்வின் இறுதியின் இரண்டாண்டுகள் என்றே கருதத் தோன்றுகிறது. மாபெரும் அரசியல் தீரனாக, புரட்சிவாதியாக இருந்த ஆற்றல் ஆன்ம லாபத்தேட்டத்தை எல்லாருடைய குறிக்கோளாகத் தரும் மகரிஷியாக பரிணமித்த அந்த மாற்றமே வ. வே. சு. ஐயர் அவர்களின் தியாக வாழ்க்கை.

அந்த வரலாற்றை நோக்குவோமே!

வராகனேரி வேங்கடேச சுப்பிரமணிய ஐயர் என்ற முழுப்பெயரே வ. வே. சு. ஐயர் என்று சுருங்கி நிற்கிறது. 1881 — ஏப்ரல் — 2 ஆம் நாள் பிறந்த வ. வே. சு. தனது பன்னிரண்டாம் வயதிலேயே மெட்ரிகுலேஷன் படிப்பில் அப்போதைய (1893) சென்னை மாகாணத்தின் *ஐந்தாவதாகத் தேர்ச்சி பெற்று, பதினாறும் வயதில் (1897), பி ஏ. யிலும் சிறப்பு நிலையில் தேர்வு பெற்றுப் பெரும் புகழுக்குரியவரானார். தமது பத்தொன்பதாம் வயதிலேயே, வக்கீல்படிப்பினை முடித்து வழக்குரைஞராக திருச்சியில் தொழில் புரிந்தார்.

வ. வே. சு. வின் பிள்ளைமைப் பருவத்திலும், இளமைப் பருவத்திலும், அவரது தந்தையாரின் சிந்தனைகளும், செயல்

---

* அப்போதைய சென்னை மாகாணம் என்பது மலபார் என அழைக்கப்பட்ட கேரள நாட்டுப் பகுதிகள் சில ஹைதராபாத் சுதேசி ராஜ்யம் நீங்கிய ஆந்திரப் பிரதேசம், தென்கன்னடம், உள்ளிட்ட சில கர்நாடகப் பகுதிகள் கொண்டு பெரிய நிலப்பரப்பு ஆகும்.

களும் ஏற்படுத்திய தாக்கங்கள், குறிப்பிடத்தக்கவை. வ. வே. சு. வின் தந்தை ஆழ்ந்த ஹிந்துமதப் பற்றுள்ளவரா யிருந்தார். ஆனால் பரந்த உள்ளம் கொண்டவர், தமது சுற்றுப்புறச்சிறுவர், சிறுமியரை ஒன்று சேர்த்து வரகனேரி யிலிருந்து திருவரங்கம். திருவானைக்காக் கோயில்களுக்கு — நான்கு மைல் தூரம் வரை — நடத்தியே சென்று தொழவைப் பதும், உடற்பயிற்சியளிப்பதும், வரலாற்று இதிகாசப் புகழ் பெற்ற வீரர்களின், வீராங்கனைகளின் சரித்திரங்களையும், சாகஸச் செயல்களை விவரிப்பதும், அவரது வழக்கமாயிருந்தது இப்படிப்பட்ட பயிற்சிகளிலும் இளைஞன் வ. வே. சு. வும் ஈடுபாடுகொண்டான். 'பஸ்கியும்' 'தண்டாலும்' 'கர்லாக் கட்டை' சுற்றுவதும், நீந்துதலும், ஆகிய பலவிளையாட்டுகளைப் பயில்வது அவனுக்குப் பிரியமான பொழுதுபோக்காயிற்று. இப்பயிற்சிகள் அவனை இளம் வயதிலேயே ஒரு தீரனாக்கிற்று, அவனது அஞ்சாமைப் பண்பு, சீக்கிரமே அவனை ஓர் இளைஞர் தலைவனாக்கிவிட்டது.

பிள்ளைமைப் பருவத்தில் அவன் பெற்றிருந்த அஞ்சா மையைக் காட்டும் நிகழ்ச்சியொன்றினை நினைவு கூரலாம்; வ. வே. சு. வைச் சுற்றியிருந்த 'பிள்ளைகள்' கூட்டத்தில் ஒரு சமயம் ஓர் அறைகூவல் வந்தது. அவர்களது ஊர்ப்பகுதியின் எல்லையிலே ஒரு காளி கோயில், தனிமையில் நின்றுகொண்டி ருப்பது. அதைச் சுற்றிலும் காடு, புதர்களும், முட்செடிகளும், அடர்ந்து வளர்ந்து எளிதிலே புகமுடியாது இருக்கும். பாம்பு களும், நரிகளும், விஷப் பூச்சிகளும், ஏராளமாக நிறைந்திருந்த காட்டுப்பகுதி. சிறுவன் சுப்பிரமணியத்தினிடம் கூறினார்கள், மற்றையோர்: "நிலவில்லாத நள்ளிரவில், பேய்கள் சூழ்ந்திருப்ப தாகக் கூறப்படும் அந்தக் காட்டுப்புதர்ப் பகுதிக்குள் சென்று அக்காளிகோயிலுக்குள் சென்றுவரவேண்டும். அங்குசென்று வந்ததன் அடையாளமாக, அக்கோயில் கதவில் பூசப்பெற்றி ருக்கும் குங்குமச் சாந்தினையும், அங்குள்ள பலி பீடத்தில் படிந்துள்ள மையினையும் எடுத்து வந்து காட்டவேண்டும். உன்னால் முடியுமானால், நாங்கள் உன் வீரத்தையும், அஞ்சாமையையும் ஒப்புக்கொள்வோம்" என்று. சிறுவன் வ. வே. சு. தயக்கமேதுமின்றியே இந்த அறைகூவலை ஏற்று, அவர்கள் விரும்பியபடியே அவற்றைக் கொணர்ந்து கொடுத்த போது, எல்லாரும் அறிந்துகொண்டனர், அவன் எத்தகைய அஞ்சா நெஞ்சும், உடல் உறுதியும் கொண்டவன் என்பதை.

பிறகு, அர்ச் ஜோசப் கல்லூரியில் பி. ஏ. படித்தபோது வரலாறும், பொருளியலும், இலத்தீன் மொழிப் படிப்பும் வ. வே. சு. வைப் பெரிதும் கவர்ந்தன. இலத்தீன் படிப்பில் அவனே முதலாவதாக நின்றான். பேச்சுப் போட்டிகளில் பல வெற்றிகளைக் கண்டான். படிப்பிலே பல பரிசுகள் அவனை நாடி வந்தன.

இலக்கியம் பயில்வதில், வ. வே. சு. தனிச்சுவையை உணர்ந்தான். ஹோமர், வெர்ஜில், போன்ற மேனாட்டுக் காப்பியப் புலவர்களையும், தன்னேறில்லாதவர் எனப் போற்றப் படும் ஆங்கில நாடகாசிரியர் ஷேக்ஸ்பியரையும், ஸ்பென்ஸர், ஹக்ஸ்லி, ஷோப்பின்ஹார், எமர்ஸன் போன்ற சிந்தனைக் கனம் வாய்ந்த தத்துவாசிரியர்களையும், நமது நாட்டு கம்பனையும், காளிதாஸனையும் ஒருங்கே பயின்ற திறத்தில் வ. வே. சு வின் பரந்த கல்வியறிவின் நிலையை ஒருவாறு உணரலாம். இந்தக் கல்வியறிவோடு கூட, 'சதுரங்க' விளையாட்டும், 'வானவியலும்' வ. வே. சு. வின் மனத்தை கவர்ந்தன அவற்றிலும் இளைஞன் வ. வே. சு. சிறப்பான பயிற்சி பெற்றான்.

இப்படி விரிந்த. ஆழ்ந்த கல்வியறிவு, உடல்வளம், மனவளம் பெற்று வளர்ந்த வ. வே. சு. விற்கு அவரது பதினாறும் வயதில் திருமணம் நிகழ்ந்தது. வ. வே. சு. வின் துணைவி மாது ஸ்ரீ பாக்கியலக்ஷ்மியும் தேசபக்திமிக்கவராகவே வாழ்ந்து, ஐயர் அவர்களின் கஷ்டங்களிலும் பணிகளிலும் பங்கு கொண்டு வாழ்ந்தார். அவ்வம்மையாரும் 'ஒத்துழையாமை இயக்க' முன்னிட்ட பல காந்தீயப் போராட்டங்களிலும் பங்குகொண்டு, 73 வயது வரை வாழ்ந்து மறைந்தார்.

திருச்சியில் 'வக்கீல்' தொழிலில் ஐயர் அவர்கள் 5 வருடங்கள் ஈடுபட்டிருந்தார். அவரது ஒன்றுவிட்ட மைத்துனரான திரு. பசுபதி ஐயர், அவரை இரங்கூனில் வந்து தொழில்புரிய அழைத்தபோது ஏற்றுக்கொண்டார். அங்கே அவருக்கு மேல்நிலை வழக்குரைஞராக இருந்த ஆங்கிலேயரின் மனமொப்பிய பாராட்டினைப்பெற்று, அவரது யோசனைப்படி லண்டன் சென்று 'பாரிஸ்டர்' படிப்புத்தொடர முன் வந்தார். வ. வே. சு. வின் லண்டன் செல்லும் திட்டத்தை உறுதிசெய்யக் காரணமாக இருந்த மற்றொரு நிகழ்ச்சியும் உண்டு. திருச்சியி

லிருந்து இரங்கூனில் தொழில் புரிந்துவந்த இந்தியர்களுள் டாக்டர் தி. சே. சௌ. ராஜன் அவர்களும் ஒருவர். அங்கே மருத்துவத் துறையில் ஓர் ஆங்கிலேய உயர் அதிகாரி திரு. ராஜன் அவர்களை அவமதிக்கும் வகையில் நடந்து கொண்டார். அதன் காரணமாக, திரு. ராஜன் தன் பணியை ராஜினமா செய்துவிட்டு லண்டன் சென்ருர். அந்நிகழ்ச்சியும், வ. வே. சு. வின் மனத்தில், லண்டன் சென்று தம் தகுதியை வெளிப்படுத்திக்காட்ட வேண்டும் என்ற அவாவை ஊட்டிற்று.

வ. வே. சுப்பிரமணியம் லண்டன் வந்து சேர்ந்தபோது அவருக்கு வயது இருபத்தாறு. லண்டன் வரும் போது அவர் எடுத்துச்சென்ற தமிழ், ஆங்கில, வடமொழி, லத்தீன் நூல்களுக்குள்ளே கம்பனது இராமாயணமும் உண்டு. இரங் கூனிலிருந்து லண்டன் வரை இவரது கப்பல் பிரயாணம் சுமார் ஒன்றரை மாதங்கள் கொண்டது.

நீண்ட அந்தப் பிரயாணத்தின்போது சில சீக்கியரு டனும், இஸ்லாமியருடனும் அளவளாவி அவர்கள் சமயம் சார்பான பல நுட்பமான விஷயங்களைத் தெரிந்து கொண்டார். இந்த அநுபவமும், அறிவும் பின்னல் அவரது வாழ்க்கையில் மிகவும் நெருக்கடியான சந்தர்ப்பங்களில் உதவின. குறிப்பாக வ. வே. சு. வின் மனத்திலே, சீக்கிய மதம், சாதிப்பாகுபாட்டை ஒழித்துவிட்டிருந்த பான்மை, அழுத்தமான ஒரு சிந்தனையைத் தூண்டிவிடுவதில் வெற்றிகொண்டது. வ. வே. சு. லண்டன் வந்து சேர்ந்தது அவரது வாழ்க்கையிலே பெரியதொரு திருப்பம் ஏற்படக் காரணமாயிற்று.

லண்டன் சேர்ந்த, முதல் மூன்று மாதங்கள், வ. வே. சு. ஐயர், பாரிஸ்டர் படிப்புக்குரிய வகையில் வாழத்தேவையான *லண்டன் 'நாட்டியம்' **மேற்கத்திய இசை, இவற்றை பயிலத் தலைப்பட்டார். ஆனல், இவைகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் சந்திப்பு ஐயர் அவர்களுக்கு ஏற்பட்டது. சைவ உணவு கருதி 'இந்தியா ஹவுஸ்' என அழைக்கப்பட்ட ஒரு இல்லத்தை அவர் அடைந்தார். குஜராத்தி அறிஞரும், புரட்சியாளருமான ஷாம்ஜி கிருஷ்ணவர்மா என்பவரால் லண்டன் வந்து சேரும் இந்தியர்களுக்கு உதவுவதற்காக நிறுவப்பட்டது

---

* Ball-room Dancing

** Western Music

'இந்திய ஹவுஸ்'. அங்கு தங்குமிடமும், இந்திய உணவும் தரப்பட்டன. பாரிஸ்டராக லண்டனிலேயே குடியேறிவிட்ட கிருஷ்ணவர்மாவிற்கு பிரான்ஸ் நாட்டுப் புரட்சியாளருடனும் தொடர்பிருந்தது. அந்நாட்டின் குடியாட்சியிடமும் பெரு மதிப்புக்கொண்டிருந்தார். வர்மாவின் முயற்சியால் 'இந்தியன் ஹோம் ரூல் ஸொஸைட்டி' தோன்றிற்று. அது ஒரு பத்திரி கையையும் நடத்திற்று.

அந்தச் சங்கத்தின் நோக்கம் இந்திய விடுதலைக்காகப் பாடுபடுதலும், இந்தியர்களுக்கு விடுதலை நாட்டம் தருவது மேயாகும். வர்மா அவர்களின் வள்ளண்மை தான் சிவாஜி யின் பேரால் ஒரு அறக்கட்டளை நிறுவி ஐரோப்பா சென்று பயிலும் இந்திய மாணவர்களுக்கும் பண உதவி செய்து வந்தது. தேசபக்தர் லோகமான்ய பாலகங்காதர திலகர் அவர் களது பரிந்துரையால், அந்த உதவிப் பணம் பெற்று, விநாயக தாமோதர ஸவர்க்கார், லண்டன் வந்து சேர்ந்தார். அவர் லண்டன் வருவதற்குச் சில நாட்கள் முன்னர்தான் தங்கள் குலதெய்வத்தின் முன்னர், 'எப்படியாவது பிரிட்டிஷாரை என் தாய் நாட்டை விட்டு வெளியேற்றுவேன்' என்று சூளுரைத் திருந்தார். அதனுல் பம்பாயில் 'அபிநவ பாரதம்' என்ற சங்கத்தைத்தோற்றுவித்து, 200 உறுப்பினரையும் சேர்த்திருந் தார். அவர்கள் எல்லோருக்கும் ஆயுதப் புரட்சியால் வெள்ளை யனை வெளியேற்றி இந்தியாவுக்கு விடுதலை பெறவேண்டும் என்ற கொள்கைதான் உண்டு. இத்தகைய பின்னணியுடைய வீரஸவர்க்கார் 'இந்தியா ஹவுஸ்' வந்து சேர்ந்ததும், வர்மா அதன் நிர்வாகத்தை அவரிடமே தந்துவிட்டு பாரிஸ் சென்று அங்கிருந்த பிகாஜி காமா என்ற பார்ஸிப் பெண்மணியையும் சேர்த்துக்கொண்டு பிரிட்டிஷாருக்கு எதிர்ப்பைத் தருவதிலே முனைந்து விட்டார்.

இந்த, இந்திய விடுதலை நாட்டச் சூழ்நிலை மிக்க இந்தியா ஹவுஸில்தான் வ. வே. சு. ஐயர் ஒரு நாள் வந்து சேர்ந்தார். எங்கே இந்திய மரக்கறி உணவு கிடைக்கும் என்று தேடிவந்த வ. வே. சு. ஐயருக்கு, 'இந்தியா ஹவுஸ்' அவரது தியாக வாழ்க்கையின், முதல் அத்தியாயத்தைத் தொடங்கி வைத்துவிட்டது. லண்டன் வாழ்க்கை, ஐயர் அவர்கள் அங்கே ஸவர்க்காரின் நட்பைப் பெற்று இந்திய விடுதலை விரும்பும் தீவிர வீரருள் ஒருவரானுர். அங்கே தான் தமிழ்நாட்டிலிருந்து வந்திருந்த டாக்டர் ராஜன் அவர்

களையும் சந்தித்தார். இம்மூவரின் தீரம்மிக்க செயல்களால் இந்தியா ஹவுஸின் அலுவல்கள் தீவிரமாயின. ஐயர் அவர்கள் 'அபிநவ பாரத்' தின் துணைத்தலைவராகவும், வீரஸவர்க்காரின் வலக்கரமாகவும் ஆகிவிட்டார். இந்தியா ஹவுஸில் இந்த இளைஞர் கூட்டம் இந்திய விடுதலைக்கான வழிமுறைகளை விவாதித்து, அது குறித்த தத்துவக் கோட்பாடுகளை வரையரை செய்தது. இவர்களது 'அலுவல்கள்' 'கூடிய சீக்கிரமே பிரிட்டிஷ் இரகசியப் போலீஸாரின் கண்காணிப்பிற்கு இலக்காயின.

ஐயரும் மற்றையோரும் 'அபிநவ பாரத்தில்'* எடுத்த முடிவுகளில் தலையாயவை: இந்தியாவை அடிமைபடுத்தி வைத்திருந்த பிரிட்டிஷாருடன் ஆயதப்போருக்கு ஆயத்தமாகுதல்' இந்த நோக்கத்திற்காக ஆயுதங்களை வாங்கி பக்கத்து நாடுகளில் சேகரித்து வைத்திருத்தல். இவை தவிர, தேசிய இயக்கத்திலும் ஆயுதங்களை உபயோகிப்பதிலும் இந்தியருக்குப் பயிற்சி அளிப்பது, இந்தச் சங்கம் மேற்கொண்ட முயற்சிகளாகும். இந்த நோக்கங்களை நிறைவேற்ற, இவர்கள் அயர்லாந்து, ரஷிய, துருக்கி, புரட்சியாளர்களுடன் தொடர்பு கொண்டனர்.

இந்தியா ஹவுஸிலிருந்த இந்த தேசபக்தி மிகுந்த இளையோர், மற்றைய நாட்டு தேசபக்த வீரர்களின் வாழ்க்கையினின்றும் ஊக்கம் பெற்றனர். அதன் விளைவாக இத்தாலிய நாட்டு கரிபால்டி, மாஜினி ஆகியோரின் வீரம் செறிந்த, தியாகம் நிறைந்த வாழ்க்கை வரலாறுகளை இந்திய மொழிகளில் எழுதி வழங்கும் பணியை மேற்கொண்டார். வ. வே. சு., தமிழிலே இவ்வரலாறுகளை எழுதி, அப்போது பாண்டிச்சேரியில் அடைக்கலம் புகுந்திருந்த மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஆசிரியராக இருந்து நடத்திவந்த இந்தியா என்ற வார இதழில் தொடர்ச்சியாக பல வாரங்கள் வெளியிட்டு வந்தார். இதனுடன்கூட வ. வே. சு. அவர்கள் வேறு ஒரு முக்கிய எழுத்துப் பணியை இந்திய விடுதலை இயக்கத்தை இந்தியாவில் தீவிரமாக்கும் நோக்கத்துடனும், மற்றைய நாட்டவருக்கும், அதன் நியாயத்தை உணர்த்தும் முகமாகவும் மேற்கொண்டார். 'இலண்டன் கடிதம்' என்ற தலைப்பில் ''இந்தியா'' பத்திரிகை

---

* R A. Padmanabhan, V. V. S. Iyer
National Book Trust of India, P. 19

யில், வாரந்தோறும், லண்டனில் இருந்த தீவிரவாதிகளின் செயல்களையும் அவற்றின் தார்மிகத்தையும் விளக்கி எழுதி வந்தார். அயர்லாந்து மக்களின் சுதந்திரப் போராட்ட முயற்சிகளை எப்படி பிரிட்டிஷ் அடக்குமுறை ஒடுக்குகிறது என்பதையும், உலக அரங்கிலே பிரிட்டனின் செல்வாக்கு, அப்படியொன்றும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அவர்களால் காட்டப்படும் அளவுக்கு இல்லை என்பதையும் ஐயர் அவர்கள் இந்தக் கட்டுரைகளில் வற்புறுத்தி வந்தார். இந்தக்காலகட்டத்தில் தான் ஐயர் அவர்கள் மாவீரன் நெப்போலியனின் போர் முறைகளையும், தந்திரங்களையும் பற்றிப் படித்து ஆய்ந்து தமிழில், அவ்வாழ்க்கையையும் எழுதினார் என்று தெரியவருகிறது. இத்தகைய எழுத்துக்களால் இந்தியாவின் தேசபக்தியை கொழுந்துவிட்டெறியச் செய்ய, ஐயர் பெரிதும் விரும்பினார் பாடுபட்டார்.

பிரிட்டிஷ் காவல் துறையினர் அடிக்கடி இந்தியா ஹவுஸை சோதனையிட்டபோது தப்பி, பிறகு ஸ்காட்லண்டு யார்டின் இரகசியப் போலீஸ் கெடுபிடிகளுக்கும் தப்பியதுபற்றி நாம் அறிய முடிகிறது. இப்போது கிடைத்துள்ள ஐயர் எழுதி வைத்திருந்த ஒரு நாட்குறிப்பு* நோட்டுப் புத்தகத்தில், துப்பாக்கிகள் போன்ற ஆயுதங்களைச் சேகரிக்கவும், வெடி மருந்தும், மற்றைய இரசாயன வெடிப்பொருள்களும் வாங்கி வைத்த விபரங்களையும், ஒரு சங்கேத மொழியின் வழியாக ஐயர் அவர்களும் மற்றையோரும் நடத்திய செய்திப்போக்குவரத்துகளையும் அறிய முடிகிறது. வெடி குண்டுகள் தயாரிக்கும் வழிபற்றிய குறிப்புக்களையும் எழுதி, அவற்றை இந்தியாவில் வெள்ளையருக்கெதிராக உபயோகிக்கும் முறையில் பரப்ப மேற்கொண்ட முயற்சிகளையும், ஐயரின் இந்தப் புத்தகத்தில் தெரிந்துகொள்கிறோம்.

ஐயர் அவர்களின் இந்த முயற்சிகள் நடந்த லண்டன் வாழ்க்கை காலத்தில் தான், பிரிட்டிஷ் நிர்வாகத்தினர் சிலரால் இந்தியாவின் 1857ம் ஆண்டு புரட்சி, வெறும் கலகமென்றும், ராணி லெட்சுமிபாய், நானா ஸாகிப் போன்ற தேச

---

* புது தில்லியிலுள்ள நேரு நினைவு அருங்காட்சியத்தில் இந்த நோட்புக் இப்போது வைக்கப்பட்டுள்ளது. ஐயர் அவர்கள் திருமகனார் வி, வி. கிருஷ்ணமூர்த்தி இதைத் தந்துள்ளார் என்று திரு. R. A. பத்மநாபன் குறிப்பிடுகிறார்.

பக்தர்கள் வெறும் வெறியர்களென்றும் கேலி செய்து காட்டப் பட்டனர். அதைச் செய்ய ஒரு விழாவினையே நடத்தி, லண்டனில் நாடகங்களையும் நடத்தினர். ஸவர்க்கார், ஐயர், ராஜன் போன்ற இந்திய தேச பக்தர்களுக்கு இது பெரிதும் எரிச்சலை ஊட்டிற்று. வ. வே. சு. பதிலடி கொடுக்க '1857ம் வருடப் புரட்சியின் தியாகிகள்' விழா என்ற கோஷத்துடன், லண்டனில் ஸவர்க்காரின் துணையோடு கூட்டங்கள் நடத்திக்காட்டினார். இதன் தொடர்பாகத் தோன்றிய சர்ச்சைகளும், பிரிட்டிஷ் அரசின் கெடுபிடிகளும், ஒரு வருடத்துக்கு மேலாக நீடித்து இந்தியாவில் பல பாகங்களிலும், குறிப்பாக பம்பாய், புனா, வங்காளம் முழுவதிலும் பெரும் அரசியல் புயலையே தோற்றுவித்தன, அப்போது தான் முசாபர்பூர் குண்டு வீச்சும், அலிப்பூர் கிளர்ச்சியும் ஏற்பட்டன. அவற்றின் விளைவாக லோகமான்ய திலகர் பர்மாவிலுள்ள மாண்டலே சிறைக்கு அனுப்பப்பட்டார். அரவிந்தகோஷ் கைது செய்யப்பட்டார். லண்டனில் ஸவர்க்காரும் ஐயரும் தீவிரமாக கண்காணிக்கப் பட்டனர்.

வ. வே. சு., டாக்டர் ராஜன், ஸவர்க்கார் மூவருமாக, அந்த சந்தர்ப்பத்தில் லண்டனில் கூட்டங்கள் நடத்தி திலகர் நாடுகடத்தப்படுவதற்கு மறுப்புத் தெரிவித்தனர். ஸவர்க்கார் மராத்திமொழியில் எழுதி முடித்திருந்த '1857 — புரட்சி' என்ற நூலை ஐயர் அவர்கள், ஐ. ஸி எஸ் படித்துவந்த சில இந்திய இளைஞர்களுடன் சேர்ந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அந்நூலை இங்கிலாந்திலும், பிரான்ஸிலும் வெளியிட முடியாமல், எப்படியோ ஹாலந்து நாட்டிற்கு சாமர்த்தியமாக அனுப்பிவைத்து வெளிவரச் செய்தார். பிறகு அந்நூலின் பலபடிகளை ஐரோப்பிய நாடுகளிலும், இங்கிலாந்திலுமுள்ள முக்கியமான வெள்ளையருக்கும் விலையின்றி அனுப்பிவைத்துவிட்டார். இந்த முயற்சியால், இந்திய விடுதலைப் போராட்டத்தின் வேகம், தர்மம், இந்திய தேசபக்தர்களின் ஆற்றல் ஆகியவை பற்றிய அறிவு பிரான்ஸ், ஜெர்மனி, ரஷியா, துருக்கி, அமெரிக்கா ஆகிய நாடுகளில் வளர்ந்தது. குறிப்பாக அயர்லாந்து நாட்டு விடுதலை வீரரிடம் சிறந்த கிளர்ச்சியைத் தோற்றுவித்தது என்று ஐயர் அவர்களின்

குறிப்புக்களிலிருந்து அறிய முடிகிறது. இந்த நூலின்* பல படிகள், இந்தியாவுக்குள்ளும் பரவலாகத் தரப்பட்டன என்பதைக் சொல்லத் தேவையில்லையே!

வ. வே. சு. ஐயர் தலைமையில், லண்டனில் வாழும் இந்தியர்களில் இப்படி குறிப்பிடத்தக்க எண்ணிக்கையாளர் பல புரட்சியாளர்களாக வடிவெடுத்துக் கொண்டிருந்தபோது, நடந்த நிகழ்ச்சிகளில் இரண்டு குறிப்பாக நோக்கத் தக்கன. அவை ஐயரின் கூர்த்தமதிக்கும், நெஞ்சுரத்திற்கும், தேசபக்திக்கும், எடுத்துக்காட்டாகும்.

பிரிட்டிஷ் போலீஸார் கீர்த்திகர் என்ற மராத்தி இளைஞரை பம்பாயிலிருந்து வரவழைத்து எப்படியோ இந்தியா ஹவுஸில் தங்களது உளவாளியாக வைத்து, ஐயரின், மற்றவரின் பிரிட்டிஷ் விரோத நடவடிக்கைகளைப்பற்றி அவ்வப்போது அறிந்து வந்தனர். தவிரவும் ஐயரும் மற்றையோரும் அப்போது தோற்றுவித்திருந்த இந்திய சுதந்திரச் சங்கத்தின் செயல்பாடுகளிலும், கீர்த்திகர் கலந்துகொண்டு, விபரங்களை பிரிட்டிஷாருக்குத் தெரியப்படுத்தி வந்தான். ஆனால் கூடிய சீக்கிரமே ஐயர் அவர்களுக்கு கீர்த்திகரின் பழக்க வழக்கங்களைக் கவனித்தபோது ஐயம் உண்டாயிற்று. ஒருநாள் அவனது பெட்டியை அவனில்லாதபோது திறந்து பார்த்து, அவன் பிரிட்டிஷ் அரசுக்கு அங்கு நடப்பதை சொல்லும் உளவாளியாக இருப்பதைக் கண்டுகொண்டார். பிறகு, கீர்த்திகர் வந்தபோது தனியாக அறைக்குள் அடைத்துக் கொண்டு, துப்பாக்கி முனையில், அவனை அச்சுறுத்தி அவன் பணிந்ததும், உயிர்ப்பிச்சை அளித்து அவனிடமிருந்து உண்மையை வரவழைத்து விட்டார்.

அதன் பிறகு, கீர்த்திகரை இந்தியா ஹவுஸில் தமது கண்காணிப்பிலே வைத்துக்கொண்டு, தமது விருப்பப்படியான

---

* இந்நூலின் கையெழுத்துப்பிரதி, ஐயர் அவர்களின் குறிப்புக்களுடன் கூடியது. இது 38 ஆண்டுக்காலம் எப்படி ஒரு போர்ச்சுகீஸிய இந்திய நாட்டு இளைஞரான 'கூட்டினோ' என்பாரால் போர்ச்சுகல் எடுத்துச் செல்லப்பட்டு, காப்பாற்றப்பட்டு 1947ல் ஸவர்க்காரின் கையில், விடுதலையடைந்த இந்திய மண்ணில் சேர்க்கப்பட்டது என்ற விபரத்தை திரு. R. A. பத்மநாபன் அவர்கள் 'V. V. S. ஐயர்' என்ற தமது புத்தகத்தில் மிகச் சுவையாகக் குறிப்பிட்டுள்ளார் (P P 32, 33)

குறிப்புகளையே பிரிட்டிஷ் அரசுக்கு வாரந்தோறும் அனுப்பி வைக்கச் செய்தார்.

இந்நிகழ்ச்சிகளுக்கிடையே, ஐயரும், டாக்டர் ராஜனும், மற்றைய தேசபக்த இந்தியரும் எப்படியோ, லண்டனில், துப்பாக்கி சுடும் பயிற்சிகளையும் பெற்று வந்தனர். தங்களது புரட்சித் திட்டங்களை நிறைவேற்றத் துடித்துக்கொண்டிருந்த ஐயருக்கு, இந்தியரின் ஆயுதப்புரட்சி எப்படியிருக்கும் என்பதின் அடையாளம் ஒன்றை, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத் தலைநகரான லண்டனிலேயே காட்டியாக வேண்டும் என்ற எண்ணம் வலுத்தது. டாக்டர் ராஜன் அவர்களும் இதற்கு உடன்பட்டார். ஆகவே, சில இந்திய இளைஞரை மொராக்கோ நாட்டில் அப்போது நடந்துவந்த விடுதலைப்புரட்சி எப்படி நடக்கிறது என்று பார்த்துவர அனுப்பிவைத்தார்.

பிறகு, மதன்லால் திங்கரா என்ற பஞ்சாபி இளைஞருக்கு மனவுறுதிப் பயிற்சி அளித்து, தயார் செய்தார். திங்கராவின் கையை கவிழ்த்து வைக்கச் சொல்லிப் பல தடவை ஊசியை, ஒருபுறம் குத்தி மறுபுறம் வரும்படியாகச் செலுத்துவார், திங்கரா கையை அசைக்காமல் இருக்க வேண்டும். பிறகு, திங்கராவிற்கு துப்பாக்கி சுடும் பயிற்சியும் தருவார். இப்படிப் பலநாள் நடந்த பின்னர், திங்கராவே "என் உயிரைத் தியாகம் செய்யும் தருணம் வந்து விட்டது, நான் ஒரு வெள்ளையனை யாவது, தொலைத்தாக வேண்டும்" என்று கேட்கத் தலைப்பட்டான். அதன் பின்னர், இந்தியா மந்திரிக்கு மெய்க்காப்பாளராக இருந்த ஸர் கர்ஸான்வைலி என்ற ஆங்கிலேயரை, இம்பீரியல் இன்ஸ்டிடியூட்டின் ஜெகாங்கீர் மண்டபவாயிலில் சுட்டுக்கொன்று, வங்காளப்பிரிவினைக்குக் காரணமாயிருந்த கர்ஸான்பிரபுவினைக் கொல்லமுடியாது போன வஞ்சத்தைத் தீர்த்துக்கொண்டான். அவன் கைதுசெய்யப்பட்டு தூக்கிலிடப் பட்டான். விசாரணையின் போது கோர்ட்டில் அவன் கேட்ட கேள்வி, அவன் செய்த வைலி கொலை லண்டனை எப்படிக் கிடுகிடுக்க வைத்ததோ, அதற்கும் மேலாக ஒரு தாக்கத்தை ஏற்படுத்திற்று.

தான் மறுபிறப்பில் நம்பிக்கைகொண்டுள்ள இந்து என்றும், ஆகவே மறுபடியும் பிறந்து, சீக்கிரமே வைலிகொலை போன்ற இன்னும் பல அரசியல் கொலைகள் ஆற்றி இந்தியாவை அடிமை கொண்டுள்ள வெள்ளையர் அனைவரையும்

உயிர் முடிக்க வேண்டும் என்றும் கூறினன், ஆகவே, தனக்குக் காலந்தாழ்த்தாமல் தூக்குத் தண்டனை தரவேண்டும் என்றும் கேட்டு தன் கலங்காத நெஞ்சத்தைக் காட்டினன். ஐயர் அவர்களுக்கும், மற்றையோருக்கும், இது பெரிய ஊக்கத்தை அளித்தது. தானும் இதுபோலவே தன் உயிரைத் தாய் நாட்டுக்கு அர்ப்பணிக்க வேண்டுமென்றே உறுதி கொண்டார் ஐயர். வைலி கொலையினைத் தொடர்ந்து லண்டன் நகரில் நடந்த புரட்சியாளர் கூட்டங்களில் வெள்ளையரோடு, ஐயர் பல தடவை மோத நேரிட்டது. அதன் பிறகு, ஐயரைப் பிரிட்டிஷ் போலீஸார், கடுமையாகக் கண்காணிக்கத் தலைப் பட்டனர்.

திங்கராவிற்கு மரண தண்டனை விதித்தபோது, அவன் தனது உடலைத் தீயிலிட்டு விடுமாறு வேண்டினன். அது மறுக்கப்பட்டது. அச்சமயம் கிளாஸ்கோ நகரில் ஏற்பட்ட தீ விபத்து ஒன்றினை, ஐயரைப்போன்ற தீவிர இந்திய தேசிய வாதிகள் திங்கராவின் வேண்டுகோளை மறுத்த பிரிட்டிஷ் அரசிற்கு அக்னி தேவன் காட்டிய பாடம் என்றே கருதினர் கள். ஆகவே இதனைப்பற்றி பாரதியின் இந்தியா பத்திரிகை யில் வெளிவரும் லண்டன் கடிதத்தில் குறிப்பிட்டு எழுதினர். பாரதியாருக்கு இந்தக் கருத்து உடன்பாடாக இல்லை, பிரிட்டிஷார் திங்கராவின் வேண்டுகோளை ஏற்றிருக்கலாம். ஆனல் கிளாஸ்கோ நகர் எரிந்துதான் திங்கராவின் மரண தண்டனை பழிவாங்கப்பட வேண்டும் என்ற நிலையை அவர் ஒப்பவில்லை. ஆகவே, இந்த லண்டன் கடிதம் காரணமாக பாரதியாருக்கும், பத்திரிகையின் சொந்தக்காரருக்கும் அபிப்பி ராயபேதம் தோன்றி, அவர் விலக நேரிட்டது. லண்டனி லிருந்த ஐயர் அவர்களுக்கு இது அப்போது தெரிந்திருக்க இடமில்லை.

'தேசபந்து', 'தேசபக்தன்' என்ற பெயர்களில் லண்டனி லிருந்து இந்தியப் புரட்சியாளரின் நடவடிக்கைகள் பற்றி தொடர்ந்து, ஐயர் அவர்கள் இந்தியாவிற்குச் செய்திகள் அனுப்பி வந்தார்.

இத்தகைய செயல்கள் நடந்துகொண்டிருந்த காலத்தில் தான், முதன் முதலாக வ. வே, சு. ஐயர் அவர்கள் மகாத்மா காந்திஜியைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. தென்னுப்பிரிக் காவில் வெற்றிகரமாக தமது 'சத்தியாக்கிரஹ' முறையைப்

நடத்திக் காட்டிய பாரிஸ்டர் மோ. க. காந்தி, அங்கிருந்த இந்தியர்கள் துயர் துடைப்பதற்காக பிரிட்டிஷ் அரசுடன் பேச்சு வார்த்தைகள் நடத்த, 1909ல் லண்டன் வந்து சேர்ந்த போது, இந்தியா ஹவுஸில் வ. வே. சு. ஐயர், ஸவர்க்கார், டாக்டர் ராஜன் ஆகியோர், அவரை ஒரு முறை அழைத்துக் கூட்டம் ஒன்று நடத்தினர்கள். பிறகு வ. வே. சு. ஐயர் அவர்களும், ஸவர்க்கார் அவர்களும் அஹிம்சைப் போராட்டத்தை வகுத்துக் கொண்டுவிட்ட காந்திஜியுடன், தீவிரமாகப் பல நாட்கள் சர்ச்சை செய்து, தங்களது ஆயுதப் புரட்சிக் கொள்கைக்கு ஆதரவுதர வேண்டினர். காந்திஜியை அவரது அஹிம்சைக் கொள்கையைக் கைவிடச் செய்ய, ஐயர் அவர்களும், ஸவர்க்கார் அவர்களும் மேற்கொண்ட தீவிர முயற்சிகள் பலனளிக்கவில்லே. காந்தியடிகள் இருமாதங்களில், தென்னுப்பிரிக்கா திரும்பிவிட்டார். இதற்குப் பிறகு, சிலயாண்டுகள் கழித்து பாண்டிச்சேரியில் ஐயர் அவர்களும் காந்திஜியும் சந்தித்தபோது தீவிரப் புரட்சி வாதியான வ. வே. சு. அஹிம்சா வாதியாக மனம் மாறியது அவரது வாழ்க்கையிலும் இந்திய தேச விடுதலே இயக்க வரலாற்றிலும் பெரியதோர் மாற்றம், என்றே குறிப்பிட வேண்டும்.

மதன்லால் திங்கராவின் மரண தண்டனே நிறைவேற்றப்பட்ட பின்னர் லண்டனிலும், இந்தியாவின் பல பகுதிகளிலும் ஏற்பட்ட பல புரட்சிச் செயல்களுக்கும், அரசியல் சதிகளுக்கும், வெடிகுண்டு வீச்சுகளுக்கும், வீர ஸவர்க்கார் அவர்களும், ஐயர் அவர்களும் மற்றும் அவர்களேச் சார்ந்த இந்தியா ஹவுஸ் இந்திய இளேஞர்களுமே காரணம் என்று கருதிய பிரிட்டிஷ் அரசு, அவர்களுக்குத் தொல்லே கொடுத்தது, மேலும், வ. வே. சு. ஐயர் அவர்கள் பாரிஸ்டர் படிப்பை முதலாவதாகத் தேறிச் சிறப்பாக முடித்திருந்தும், ராஜவிசுவாசப் பிரமாணம் எடுக்க மறுத்து, அப்பட்டத்தைப் பெருமல் நிராகரித்தது, அவர்களுக்கு ஆத்திர மூட்டிற்று. இதன் பலனுக, இந்தியா ஹவுஸினே, அதன் நடவடிக்கைகள் சட்ட விரோதமானவை எனக் கூறிக் கைப்பற்றினர். பிறகு ஸவர்க்காரைக் கைது செய்ய உத்தரவிட்டனர். ஐயரும் கைது செய்யப்படக் காரணங்கள் இருந்தன. ஏனென்ருல், ஐயரும், ஐரோப்பாவின், மற்றைய நாடுகளிலும், அயர்லாந்திலும் பத்திரிகை வழியாக தமது இந்திய தேசிய இயக்கப் போராட்ட பிரசாரத்தையும் பிரிட்டிஷ் விரோத நடவடிக்கைகளேயும், தீவிர

மாக்கியிருந்தார். ஆகவே, முன் கூட்டியே திட்டமிட்டு ஐயரவர்கள் இந்தியா ஹவுஸில் தங்காமல் லண்டனில் பல்வேறு இடங்களில் தங்கியிருந்தார். இந்தச் சந்தர்ப்பங்களில், ஐயர் எங்குசென்றாலும், தமது ஆழ்ந்த பற்றுக்குரிய நூலான கம்ப இராமாயணத்தைத் தவறாமல் எடுத்து சென்று கொண்டே இருந்தார் என்று அறிகிறோம்.

வீரஸவர்க்கார் கைது செய்யப்பட்டு இந்தியாவிற்கு நாடு கடத்தப்படுகிறார் என்று அறிந்த ஐயரும், அவரது நம்பிக்கைக்குரிய மற்றையோரும், அவரைத் தப்புவிக்க வழி செய்தார்கள். பிரான்ஸின் மார்செய்ல்ஸ் துறைமுகத்தருகே ஸவர்க்கார் இட்டுச் செல்லப்படும் கப்பல் வரும்போது, அவரைச் சிறைமீட்க ஐயர் தம் நண்பர்களுடன் திட்டமிட்டார். இதற்கிடையில் ஐயரையும் கைது செய்ய உத்தரவு வந்து விட்டது. ஆகவே, ஐயர் இந்திய நாட்டுக் குடிமக்கள் பலரை, பிரேஸில் நாட்டில் குடியேற்றம் செய்யும் திட்டத்தில் தாம் ஈடுபட்டிருப்பதுபோல தம் வீட்டிற்கும் நாட்டிற்கும் சேதிகள் தந்து, பிரிட்டிஷ் அரசை ஏமாற்றி, கப்பலில் ஏறி சீக்கியர் வேடத்தில் ஆம்ஸ்டர்டாம் சென்றார். வழியில் இவரை ஐயுற்ற பிரிட்டிஷ் ஒற்றன் 'V. V. S. ஐயர்' என்று பெயரிட்ட தந்தியைக் கொடுத்தபோது அது யாரோ V. V. S. ஐயர் என்பவருக்கு என்று சாமர்த்தியமாகக் கூறிவிட்டார். ஆனால் அவரது கைப்பையில் 'V. V. S.' என்ற எழுத்துக்களை அவன் சுட்டிக் காட்டியபோது, தன் பெயர் வீரவிக்ரம் ஸிங் என்பதன் சுருக்கமே 'V. V. S.' என்றும்கூறித் தப்பிவிட்டார். பிறகு அங்கிருந்து ரயிலில் பிரயாணம் செய்து, பாரிஸ்மாநகரையடைந்தார். அங்கே ஏற்கனவே வந்திருந்த தமது இந்திய தேசிய தீவிரவாதிகளுடன் மார்ஸெய்ல்ஸ் துறைமுகம் போய்ச் சேர்ந்தார்.

ஐயர் அவர்கள் எதிர்பார்த்தபடி, மார்ஸெய்ல்ஸ் துறைமுகம் வந்து சேர்ந்த பிரிட்டிஷ் கப்பலிலிருந்த ஸவர்க்கார், தமது கண்காணிப்பாளரை ஏமாற்றி கடலில் குதித்து நீந்தியே சென்று, பிரெஞ்சுக் கரையை வந்து சேர்ந்தார். ஆனால் பிரிட்டிஷ் போலீஸாரும் அங்கு வந்து ஸவர்க்காரைக் கைது செய்து இட்டுச் சென்று விட்டது. பாரிஸிலிருந்தபடியே பிரெஞ்சு அரசோடும், பிரிட்டிஷ் அரசோடும் தமது சட்ட ஞானத்தாலும், மற்றைய ஐரோப்பிய நாட்டு சட்ட இயல்

கோட்பாடுகளை மதிப்பவர்கள் உதவியாலும், ஸவர்க்காரை பிரெஞ்சு நிலத்தில், பிரிட்டிஷ் போலீஸ் கைது செய்தது அநீதி என்ற வாதத்தை ஏற்கச்செய்ய ஐயர் எடுத்த அரும் முயற்சிகள் பலன் தரவில்லை.

அதனால் அவருக்கே, இடையூறுகள் பல முளைத்தன. பாரிஸிலே இருந்துவிடும் வாய்ப்பு இருந்தும், அதை விரும்பாமல், தம் தாய் நாடு சென்று, தமது புரட்சிப் பணியைத் தொடர வேண்டும் என்ற அழுத்தமான உந்துதலாலும், ஐயர் மறுபடியும் வேடம் புனைந்து, இம்முறை முஸ்லீம் வர்த்தகராக கப்பல் ஏறி, பம்பாய் வந்து, இருநாட்கள் தங்கி தம்மைத் தொடர்ந்து வந்த இரகசிய உளவாளிகளைந் திசை திருப்பி விட்டுவிட்டுக் கப்பலிலேயே கொழும்பு வழியாகச் சுற்றி தமிழ் நாட்டின் கடலூர் கரையை அடைந்தார். பிறகு அங்கிருந்து வண்டியொன்றில் ஏறி அந்நாளைய பிரெஞ்சு இந்தியத் தலைநகரான பாண்டிச்சேரி வந்து சேர்ந்து விட்டார். அங்கே அவர் போனவுடன் சேர்ந்தது, இந்தியா பத்திரிகை நடத்தி வந்த திரு மண்டயம் சீனிவாசாச்சாரியார் இல்லமே. ஐயர் ஏற்கனவே அவருக்கு லண்டனிலிருந்து அனுப்பிவைத்த இத்தாலிய கவி தாந்தேயின் டிவைன்காமெடியும் மற்றைய நூல்களும் முஸ்லீம் தோற்றத்திலிருந்த, ஐயரை அந்த வீட்டுக்காரர் அடையாளம் தெரிந்துகொள்ள உதவி செய்தன.

ஐயர் அவர்களின் புதுவை வாழ்க்கை

1910ம் வருடம் அக்டோபர்த்திங்களில் ஐயர் அவர்கள் புதுச்சேரி வந்தார். 1908லே அங்கு வந்துவிட்ட பாரதி, அரவிந்த கோஷ், மண்டயம் சீனிவாசாச்சாரி, பரலி. சு. நெல்லையப்ப பிள்ளை, நீலகண்ட பிரம்மச்சாரி ஆகியோருடன், ஐயருக்கு நெருக்கமான தொடர்பு தொடங்கிற்று. இதற்கிடையில் ஐயர் அவர்களது, வரகனேரி வீட்டிலும் பிரிட்டிஷ் போலீஸ் தொல்லை கொடுத்து வந்தது. ஐயர் அவர்களது துணைவியார், தம்மகளோடு அப்போது பங்களூரில் வசித்துவந்த, ரங்கூன் பசுபதி ஐயர் வீட்டில் அடைக்கலம் புகுந்திருந்தார். தமக்கும், வேறு பல தேசபக்தர்களுக்கும் அரசியல் புகலிடம் தந்து இந்திய சரித்திரத்தில், அழியாத புகழ் பெறும் வகையிலே, ஆதரித்த புதுவை நகருக்கு கூடிய சீக்கிரமே ஐயர் தமது துணைவியாரையும் அழைத்துக்கொண்டு விட்டார். ஐயருக்குக் கிடைத்த

பத்தாண்டுப் புதுச்சேரி வாழ்க்கையில், இதுவரை அழுத்தமாக இடம்பெருத இலக்கியப் பணி ஐயர் மனத்தில் மலரத் தொடங்கிற்று. புதுச்சேரி வாழ்க்கை காலத்தில்தான் ஐயர் அவர்களது மகள் சுபத்திரா தோன்றினுள்.

புதுச்சேரியை அடைந்த புதிதில், ஐயர் இளைஞர் கூட்டத்தைச் சேர்த்து, அவர்களுக்கு உடல் பயிற்சியும் உளப் பயிற்சியும் அளித்து, தமது 'பயங்கரவாத' 'ஆயுதப்புரட்சி' முறைகளில் சில ஆண்டுகள் ஈடுபட்டிருந்தது உண்மையே. அந்தக் காலத்திலேதான், அவர் வ. உ. சி. அவர்களும் சுப்பிரமணியா சிவா அவர்களும் எத்தகைய தண்டனைகளுக்கும், கஷ்டங்களுக்கும் உள்ளாக்கப்பட்டனர் என்பதை அறிந்து, தமது நண்பர்களுக்காக மனம் நொந்திருந்திருக்கிருர். ஆகவே, பரலி சு. நெல்லையப்பர் கோவை சிறையில் வ. உ. சி. யை சந்தித்து வந்தபின் தம்மிடம் பேசிய பேச்சிலிருந்து, நெல்லை மாவட்ட கலெக்டர் ஆஷ் என்ற ஆங்கிலேயர் எத்தனை கொடுமை யானவர் என்று எண்ணியிருந்திருக்கிருர். எனவே, அப்போது நீலகண்ட பிரம்மச்சாரி என்ற தேசபக்தரைத் தேடிவந்த வாஞ்சிநாதன் என்ற இளைஞனைச் சந்தித்தபோது, அவனையே பயன்படுத்தி கலெக்டர் 'ஆஷை' பழிவாங்க யத்தனித்தார் என்று கருதவேண்டியுள்ளது. நீலகண்டர், ஊரிலில்லாததால் வ. வே. சு. ஐயரைச் சந்திக்க நேரிட்ட வாஞ்சிநாதன் முன்னவரின் 'தீவிரவாத அரசியல்' 'பயங்கரப் போர்' முறைகள் பற்றிய வாதத்தால் கவரப்பட்டான். ஐயர் அவனுக்குக் குறி தவருமல் சுடும் பயிற்சி தந்தார். அதன் துணையாலும், அவனது தேசபக்தி, வெள்ளையர்மீது மூட்டிய எரிச்சலாலும், வ. உ. சி. யையும், சிவாவையும் தண்டித்த, ஆஷ் வாஞ்சிநாதனுல் மணியாச்சி ரயில் நிலையத்தில் சுடப்பட்டு உயிரிழந்தார், வாஞ்சியும் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு பாரததேச சுதந்திர இயக்கத்திற்கு, தன் உயிரைத் தானே தரும் முதல் பலியாகி விட்டான்.

இந்த 'ஆஷ்–வாஞ்சி' நிகழ்ச்சிக்குப் பின்னர் புதுவையில் வாழ்ந்த தேசபக்தர்களுக்குப் பல இன்னல்கள் தோன்றின. பிரிட்டிஷ் போலீஸாரும், அங்கே தந்திரமாக வீடுகளைப் பிடித்துக்கொண்டு குடிபுகுந்து, எப்படியாவது ஐயரையும் அவரைச் சார்ந்தோரையும் பிரெஞ்சு இந்திய எல்லையை விட்டு, பிரிட்டிஷ் இந்திய மண்ணிற்கு, கவர்ந்து கொண்டுவர

முயன்றனர். முதலாம் உலகப் போருக்கான கெடுபிடிகளை ஜெர்மனி ஆரம்பித்திருந்த சமயம் அது. அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பிரிட்டிஷ் அரசு, ஜெர்மனியைக் கண்டு சற்று அச்சம் கொண்டிருந்த பிரான்ஸ் அரசுடன், தொடர்புகொண்டு இந்த தேசபக்தர்களைப்புதுவையை விட்டுத் தள்ளவும், அல்லது புதுவை நகரை பிரிட்டனுக்கு தந்து பதிலுக்கு மேற்கிந்தியத் தீவுகளில் சில பகுதிகளைப் பிரான்ஸுக்குத்தரவும், முயன்றது. இம்முயற்சிகளைப்பாரதியாரும், வ. வே. சு. ஐயர் அவர்களும் தமது புதுவை, பாரிஸ் நண்பர்கள் மூலம், பிரான்ஸ் அரசுடன் வாதாடி முறியடித்து விட்டனர்.

ஐயரையும், மற்றைய பயங்கரவாத இந்திய தேசிய இயக்கத்தினரையும் பிடித்துத் தருபவர்களுக்கு ஆயிரக் கணக்கில் ரொக்கப் பணப் பரிசுகள் தரும் வாக்குறுதிச் சீட்டுக் களை ஏராளமாக புதுவையில் பிரிட்டிஷ் அரசு வெளியிட்டுப் பார்த்தது காலிகளைக் கொண்டு ஐயர் அவர்களின் வீட்டினை முற்றுகையிட்டு, அவரைப் பிடிக்க முயன்றது. அப்போதெல் லாம், துணிவுமிக்க ஐயர் சளைக்காமல் எதிர்ப்போரிட்டுத் தப்பி வந்தார். ஒரு சமயம் அவரது நண்பர் வீட்டிலிருந்து வெளி வரும் போது அவரைப் பிடிக்கக் காத்திருந்த உளவாளிகளிட மிருந்து, "பாடையிலேற்றப்பட்ட பிணமாகக் கிடந்து" மற்றை யோரால் வெளிக் கொணரப்பட்டும் தப்பியிருக்கிறார்.

இந்த நிகழ்ச்சிகளைப்பற்றித் தெரிந்துகொள்ளும் போது ஐயர் அவர்களின் சாகசமிக்க வாழ்க்கை நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றது. ஆனால், இத்தப் பயங்கரமான நிலையிலும் ஐயர் அயராமல், புதுவையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த தேசியப் பத்திரிக்கைகளின் வாயிலாகப்பிரிட்டிஷ் அரசினையும், அதன் கொடுமைகளையும், இந்தியருக்கு அது இழைக்கும் அநீதிகளையும், தேசியவாதிகளின் போராட்டங்களின் தார்மிக பலத்தை மிக அழுத்தமாக எழுதி வந்தார். புரட்சி இலக்கிய எழுத்தையும், ஆயுதங்களையும், நாட்டின் பல பகுதிகளுக்கும், தேசபக்தர்கள் மூலம் அனுப்பி வந்தார். ஒரு சந்தர்ப்பத்தில் பிரிட்டிஷ் அரசின் வன்மையான தூண்டுதலால் ஐயர் அவர்கள் ஆப்பிரிக்க நாட்டிலுள்ள அல்ஜியர்ஸ் என்ற நகருக்கு, பிரெஞ்சு அரசால் நாடு கடத்தப்படுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டது. அந்த அச்சுறுத்தலையே, ஒரு அறைகூவலாக ஏற்று எதற்கும் ஆயத்தமாக இருக்க விரும்பினார் ஐயர்.

ஆகவே இந்த நாடுகடத்தலுக்கு முன்னரே, தமது தாய்த் தமிழுக்கு நிரந்தரமான பணியொன்றினைச் செய்ய வேண்டும், அதன் மூலம் தமிழின் பெருமையை உலகம் உணர வேண்டும் என்று கருதிய ஐயர் திருக்குறள் முழுவதையும் ஆங்கிலத்திலே உன்னதமான முறையிலே மொழிபெயர்த்து வெளிக்கொணர்ந்தார். ஏற்கனவே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ள ஜி. யு. போப், எல்லிஸ், உள்ளிட்ட மேனாட்ட வரால் காணமுடியாத நுட்பத்தையும் விளக்கி,தமது முன்னுரை யில் குறிப்பிட்டுப் பேசினர். இப்போது புகழமைந்துள்ளது போல, ஐயரின் காலத்தில வெளியுலகில் திருவள்ளுவரின் திருக்குறள், பிரபல முற்றிருக்கவில்லை. ஆகவே, குறளை மொழி பெயர்த்த ஐயர் அவர்கள், தமது முன்னுரையிலே அதன் பெருமையை பின்வருமாறு சொல்லியிருக்கிறார்:

"தமிழ் நாட்டுக்கு வெளியே உள்ளவர், இந்தியரிலும், மற்றைய நாட்டவரில் பலரும், இந்த மாபெரும் புலவன் வள்ளுவனைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள். அப் புலவன் உலக மக்கள் அனைவருக்கும் சொந்தம். எல்லா காலத்துக்கும் உரியவன். திருக்குறளின் கருத்தாழமும், மேன்மையும், வாழ்க்கையை நெறிப்படுத்தும் ஆற்றலும் ஈடு இணையற்றவை. இதிகாச, புராணங்கள் ஆகிய சாகா வரம் பெற்ற இலக்கியங்களையும்கூட இந்நூலுடன் ஒப்பிடும் போது அவை விஞ்ச இயலாது போகின்றன. இந்நூல் "பிரபஞ்ச வேதம்" எனத்தகும். இதுவே தமிழ் வேதம்; தெய்வ மறை; பிற்கால வேத நுல். இந்த உயர்வான நூல் இதுவரை உலக மக்கள் அனைவருக்கும் பயன் தரும் வகையில் தரப்படாமல் ஓரின மக்களுக்கே உரியதாக வைத்திருப்பது, வருத்தத்திற்குரிய தாகும்."

இந்த முன்னுரைப் பேச்சிலிருந்து ஐயர் திருக்குறளின் பால் கொண்டிருந்த மதிப்பு எத்தகையது என்று உணரலாம். ஐயருக்கு அரசியலில் வெற்றியென்று சொல்ல முடியாவிட்டாலும், இத்தகைய இலக்கியப்பணி, குறிப்பாகத் தமிழ்ப்பணி, பெரிய வெற்றியைத் தந்து அவரை அமரராக்கியுள்ளது. அல்ஜீரியாவுக்குக் கடத்தப்படும் அச்சுறுத்தலின் விளைவாக ஐயர் அவர்களின் நிரந்தரமான இலக்கியப்பணி, பெருக் கெடுக்கத் தொடங்கிற்று. மேனாட்டு மொழிகள் உட்பட

பத்து மொழிகளில் நல்ல பயிற்சி பெற்றிருந்த ஐயர் அவர்களின்சிறப்பான இலக்கிய வளம் அவருக்குச் சிறந்த துணையாய் நின்றது.

இந்தக் காலகட்டத்தில்தான் ஐயர் அவர்கள், பாரதியார் சீனிவாசாச்சாரி, மற்றைய புதுவை வாழ் தேசபக்தர்கள் பல திறப்பட்ட இலக்கிய, ஆன்மீக சர்ச்சைகளில் ஈடுபட்டனர். வேதங்களும், உப நிடதங்களும், புராணங்களும், மேனாட்டு இலக்கியங்களும், லத்தீன், கிரேக்க, பிரஞ்சு மொழிகளின் காலம் வென்ற இலக்கியங்களும், இவர்களால் தீர்க்கமாக அலசப் பெற்று, அறிவுப் புலத்தை பெருக்கும் பெரும் முயற்சி ~~யாகச்~~ நடந்தது.

ஏற்கனவே அரசியலை ஒதுக்கி, ஆன்மிகத்தில் ஊன்றி யோகியாகப் பரிணமித்துக் கொண்டிருந்த அரவிந்தருடனும், ஐயர் அவர்கள் இத்தகைய சர்ச்சைகளில் ஈடுபட்டார். ஆகவே முதல் உலகப்போர் நடந்து வந்த அதே கால கட்டத்தில் ஐயர் அவர்கள் 'தேசிய இயக்க அரசியல்' வாழ்க்கையிலிருந்து இலக்கிய மன வளம் பெருக்கும் வாழ்க்கையில் முழுகி, அதன் தாக்கத்தைப் பெற்று வந்தார்கள். இந்தக் காலத்தில் ஐயர் தம்மை இலக்கியப் பணியில் ஈடுபடுத்திக் கொண்டது, அவருக்கு அப்போது மிக அவசியமாக இருந்த வருவாயையும் தந்தது 'கம்ப நிலையம்' என்ற புத்தக வெளியீட்டு நிறுவனத்தையும் ஐயர் தொடங்கினர்.

கம்ப நிலையத்தின் முதல் வெளியீடாக கவிச்சக்கிர வர்த்தி கம்பனின் இராமாயணத்தின் பால காண்டத்திலிருந்து பாடல்களைத் தொகுத்துத் தந்தார். சராசரி மனிதனுக்கும் புரியும் வகையில், ~~அதில்~~ கம்பனின் உயர்வான சிந்தனையை யும், கவிதையின் அழகினையும், மேன்மையையும் அந்நூலில் விளக்கிக் காட்டினர். அந்நூலின் மூலம், தமிழ் நாட்டின் திறனாய்வுக் கலையின் முன்னோடியாக மலரத் தொடங்கினர். பிறகு வெளிவந்த மங்கையர்கரசியின் காதல் என்ற சிறு கதைத் தொகுதியும் ஐயரின் இலக்கிய ரசனைக்கு எடுத்துக் காட்டாயிற்று. 'சந்திரகுப்த சக்கிரவர்த்தியின் சரித்திரம், 'மகாத்மா, புக்கர் வாஷிங்டன் சரிதம்' 'அகஸ்திய முனிவ ரின் விண்ணப்பம்' *ஆகிய தமிழ் நூல்களும் ஐயர் அவர்

* "ஞானபானு" என்ற தலைப்பில் சிவா சென்னையிலிருந்து வெளியிட்ட பத்திரிகையில் தொடர் கட்டுரையாக வெளி வந்தது என்று திரு R, A. பத்ம நாபன் அவர்கள் நூலில் குறிப்பிடுகிறார்.

களின் சிந்தனையைக் கிளறிய வாழ்க்கைகளின் நிருபணங்களாக வெளிவந்தன. இந்த இலக்கியப் பணி ஆற்றிய காலத்தில் தான் அமெரிக்க நாட்டு அறிஞர் எமர்ஸனின் கவிகளும், கட்டுரைகளும், வ. வே. சு. ஐயர் மனத்தினைப் பெரிதும் கவர்ந்தன. குறிப்பாக எமர்ஸனின் தன்னம்பிக்கை என்ற கட்டுரையைத் தமிழில் ஐயர் பெயர்த்துத் தந்து, பெரும்பணியாற்றியுள்ளார். எமர்ஸனின் எழுத்துக்களிலே, இந்திய நாட்டுப் புராண இதிகாசங்களின் சாரம் அருமையாக வெளிப்பட்டு, புதுத்தெளிவையும், வலுவினையும் ஊட்டுவதைக்கண்டு ஐயர் வியந்துள்ளார்.

இத்தகைய இலக்கியப்பணி ஐயர் மனத்தையும் பக்குவப்படுத்தி, 'பயங்கர வாதம்' 'அரசியல் வன்முறை' போன்ற முறைகளின் பயனற்ற தன்மையையும் தார்மிக ஆன்மநெறியின் உயர்வையும் உணர வைத்தது என்றும் கருதஇடமுள்ளது இந்த மனமாற்றத்திற்கு 1915ல் காந்தியடிகள் புதுச்சேரி வந்தது ஒரு பெருந் துணையாயிற்று என்னலாம், அரவிந்தர் சந்திக்க மறுத்துவிட்ட அன்னாரை, ஐயர் தானே சந்தித்து, உரையாடியதன் பலனாய்க் காந்திய வழிக்குத் தம்மை மாற்றிக் கொண்டுவிட்டார். மகாத்மா காந்தி இணையில்லாத ஒரு தலைவர் என்றே ஐயர், அவரை ஏற்றுக்கொண்டார் இந்தச் சந்திப்பிற்குப் பிறகு, ஐயரிடமிருந்து வெளிப்பட்ட எழுத்துக்களில், ஒரு பிரதிபலிப்பினைப் பார்க்கிறோம். முதன் முதலாக காந்தியடிகளை லண்டனில் சந்தித்தபோது ஐயர் அவரை ஒரு சத்தியசீலராகவும் - பகிரங்க வாழ்வுடையவராகவும் கண்டிருந்தார், இப்பொழுது புதுச்சேரியில் சந்தித்தபோது ஒப்பற்ற தன்னம்பிக்கையும், நேர்மை விலகாத சத்தியத்தைப் பற்றி நிற்கும் அஹிம்சை வழி நடத்தும் ஆற்றல்மிக்க தலைவராகவும் வரைக் காண்கின்ற பாங்கிலே தெளிவாகும். காந்தியவழி நம்பிக்கையின் சாயல்கள் ஐயரின் எழுத்துக்களில் புலனாகின்றது.

1920ம் ஆண்டு அரசியல் வாதிகள் அனைவருக்கும் பிரிட்டிஷ் அரசு பொது மன்னிப்பு வழங்கியபோது வ. வே. சு. ஐயர் ~~வந்து சேர்ந்தார்~~, புதுச்சேரியைவிட்டு வெளிவந்து, திருச்சி சென்று உற்றாரையும் உறவினரையும் கண்டு, பின் ஒரு தீர்த்தயாத்திரையும் மேற்கொண்டார்: அது சமயம் காசியில் இரு உறுதிமொழிகளை எடுத்துக்கொண்டார்: (1) தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் பாடுபடுவது' (2) குருகுல முறையில் கல்வி தரும், கல்வி நிலையம் ஒன்றினை நிறுவுவது என்பனவே

அவை. இந்தப் பயணத்தின் பின்னர் சென்னை வந்து சேர்ந்த ஐயர் அவர்கள் "தேசபக்தன்" என்ற தமிழ்நாளிதழின் ஆசிரியர் பணியை ஏற்றார். ஐயர் அவர்கள் பெரிதும் முஸ்லீம்கள் வாழும், பகுதியில் வாழ்ந்து, அந்தப் பணியில் ஈடுபட்டார்கள்.

ஐயரது உழைப்பால் அவ்விதழ் வளர்ந்து, வாசகர்கள் பெருகினார்கள். காங்கிரஸ் இயக்கத்திற்கும், கிலாபத் இயக்கத் திற்கும் இவ்விதழ் ஆதரவு தந்தது. ஏன், ஐயரின் கட்டுரைகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு வேறு பல தேசியப் பத்திரிகைகளிலும் வெளி வந்தன. அவ்வப்போது ஐயர் பல ஊர்களுக்கும் சென்று சொற்பொழிவுகளும் ஆற்றிவந்தார். ஆனால், ஐயர் "தேசபக்தன்" மூலமாக பிரிட்டிஷ் அரசினைக் கண்டிக்கத் தவறியதே இல்லை. ஆகவே, எந்த ஒரு காரணத்தி லாவது ஐயரைத் தண்டிக்கக் கருதிய பிரிட்டிஷ் அரசு, 1921 செப்டம்பரில் அவர் எழுதாத ஒரு கட்டுரைக்குப் பொறுப் பாக்கி, விசாரணை நடத்தி ஐயருக்கு ஒன்பது மாத சிறைத் தண்டனை தந்தது.

வ. வே. சு. ஐயர் பெல்லாரிச் சிறைச்சாலைக்கு அனுப்பப் பட்டார். இங்கிலாந்திலிருந்து தப்பி வந்து, ஐரோப்பாவிலும், இந்தியாவிலும் பல இன்னல்களுக்கு உள்ளானபோதெல்லாம் ஐயரை விட்டு பிரியாதிருந்த அவரது கம்பராமாயண நூல் இப்போதும் அவருடன் அதே சிறைக்கு சென்று விட்டது. ஐயரின் பெல்லாரிச்சிறை வாசத்தால்,தமிழுக்குப் புகழ்சேர்க்கும் பேறு வந்தது. கம்பனின் இராமாயணத்தை மிக நுட்பமாக ஆய்ந்து படித்தார். நண்பர்களின் உதவியால் வான்மீகி இராமாயண ஆங்கில மொழி பெயர்ப்பினையும், துளசி இராமா யண ஆங்கில மொழி பெயர்ப்பையும் பெற்று, 'வடமொழி' 'ஹிந்தி' மூலங்கள் ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ள வகையையும் ஆய்ந்தார். தெலுங்கு மொழி பாஸ்கர இராமாயணத்தையும் பயின்றார். இந்தப் படிப்பு நடந்த போதே, பெருந்தலைவர் திலகர் அவர்களது "கீதா ரகஸ்யம்" என்ற பகவத்கீதை பேருரையும், ஐயர் அவர்கள் ஆய்வுக்கு வந்தது என்று கூறப் படுகிறது. இவற்றையெல்லாம் படித்து, கிரேக்கம், லத்தீன், ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளின் பழமையான, புதுமையான காப்பியங்களுடன் ஒப்பிட்டு ஆய்ந்து, ஐயர் அவர்களுக்கும், தமிழுக்கும் அழியாப் புகழ் குவிக்கும் தமது கம்பராமாயண ஆய்வு நூலை, அவர் எழுதி முடித்தார். ஏறத்தாழ நாலாயிரம்

பாடல்களுக்கு மேலாக கம்பனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும் உதவினர். அந்த நூலின் முகப்பிலேயே ஐயர் அவர்கள் கம்பன், உலக மகா கவி என்ற இடத்தை, எல்லாக்கவிகளுக்கும் சக்கரவர்த்தியாக எப்படி வகிக்கின்றான் என்று எடுத்துக்காட்டுகிறார்கள். அதோடு நிற்காமல், எப்படி அவனது மூலநூலென்று கருதப்படுகின்ற வான்மீகத்தையும் ஒப்பற்ற முறையில் விஞ்சி நிற்கிறான் என்பதையும் உறுதியாக நிலை நாட்டிப் பேசுகிறார்கள்.

இந்தச் சிறை வாழ்க்கையின்போது, ஐயர் தாம் வைத்திருந்த குறிப்புப் புத்தகத்தில் எத்தனை மேனாட்டு அறிஞர்களை நுட்பமாக ஐயர் பயின்றிருக்கிறார் என்பதற்கான சான்றுகளும் கிடைக்கின்றன, என்று அறிஞர் சுட்டிக்காட்டுகின்றனர். அவ்வாசிரியர்கள் ஒவ்வொருவரும் ஒரு நாள் எத்தனை வார்த்தைகள் எழுதுவார்கள் என்பதையும, தான் எத்தனை வார்த்தைகள் எழுதினர் என்பதையும் ஐயர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்களாம். ஐயர் அவர்கள் குறுந்தொகை என்ற சங்க நூலையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். ஆனால் அந்த கையெழுத்துப் பிரதி கிடைக்கவில்லை. அவரது கம்பராமாயண ஆய்வு கூட அவரது மறைவுக்கு பலயாண்டுகளுக்குப்பின் 1950ல், தில்லித் தமிழ்ச் சங்கத்தாரால் முதலில் வெளியிடப்பெற்றது.

1922ல் ஐயர் அவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். ஏற்கனவே காசியில் எடுத்துக்கொண்ட உறுதி மொழியில் ஒன்றான தமிழின் பெருமையை உலகறியச் செய்யும் முயற்சியை ஓரளவு நிறைவேற்றிவிட்ட ஐயர் அவர்கள் இப்போது தமது மற்றைய உறுதி மொழியான குருகுலம் அமைக்கும் பணியை மேற்கொண்டார். இடையிலே ஒருமுறை பெல்காம் காங்கிரஸ் சென்றபோது, ஸவர்க்காரைச் சிறையில் சென்று பார்த்து வந்தார், மகரிஷி வ. வே. சு. அவர்கள்.

முதன் முதலாக லண்டன் சென்றபோது கப்பலில் சீக்கிய குருமார்களுடனும், இஸ்லாமியப் பேரறிஞரோடும் பழகியபோது பெற்றிருந்த அபிப்பிராயங்களும், சிந்தனைகளும், பிறகு இங்கிலாந்திலிருந்து தப்பி வந்தபோது பெற்ற அனுபவங்களும் ஹிந்துக்களின் ஜாதிப்பாகுப்பாடடினைப் பற்றியும், இந்து - முஸ்லீம் - சீக்கிய - கிறித்தவ - ஒற்றுமைபற்றியும் ஐயர் அவர்களைச் சிந்திக்க வைத்துக்கொண்டேயிருந்திருக்கின்றன. சீக்கியர்களின் சாதிகளற்ற சமத்துவ சமுதாயக்

கொள்கை அவரைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது. இவற்றுக்கும் மேலாக தாகுரின் சாந்தினிகேதனும், புக்கர் வாஷிங்டனின் தாழ்ந்தோரை உயர்த்தும் டஸ்கிஜீ கல்விக்கூடமும் அவர் அடிமனத்தில் அவைகளின் சிறப்பான அம்சங்களுடன் கூடிய பாகுபாடிகளில்லாத சமுதாயம் காணும் ஒரு குருகுலத்தைப் படைக்கும், ஆவலைத் தூண்டிவிட்டிருந்தன. காங்கிரஸ் கட்சியின் அலுவல்களில் தொடர்ந்து ஆர்வம் காட்டி வந்த ஐயர் நெல்லை மாவட்டத்தில், காங்கிரஸ் மாநாடு ஒன்றிற்கு தலைமை தாங்க வந்தபோது, சேர்மாதேவி என்ற ஊருக்கருகிலுள்ள, ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்துப் பாரத்வாஜ ஆசிரமத்தையும், அதனுல் நடத்தப் பெற்ற குருகுலக் கல்விக் கூடத்தையும் 1923ல் தோற்றுவித்தார்கள். தமிழும், ஆன்மீகமும் ஒருங்கே வளர்த்த நண்பொருநை நதியான தாம்பிர வருணியின் கரையில், சேர்மாதேவியில் ஐயர் அவர்களின் குருகுலம் மலர்ந்தது.

குருகோவிந்தர் தந்த சீக்கிய மதத்திற்கு ஒப்பவும், இந்து - முஸ்லீம் ஒற்றுமையை ஏற்படுத்தும் வண்ணமும், காந்திஜியின் வார்தாக் கல்வித்திட்ட கொள்கைகளின் ஆக்கத்தையும் கொண்டு, ஐயர் அவர்கள் வகுத்த கல்வி முறை அமைந்தது. தொழிற் கல்வியும், மனக்கல்வியும், உடல்வளக் கல்வியும் சம வாய்ப்புக்கள் பெற்று ஒருங்கிணைந்ததோர் கல்வி முறை அது. உணவிலும், உடையிலும்கூட தூய்மையும், அஹிம்சையும், ஆரோக்கியமும், குறிக்கோள்களாகக் கொள்ளப்பட்டன. மாணுக்கர்களும் ஆசிரியர்களும் ஒன்ருக இருந்தே இந்தக் கல்வி முயற்சி தழைத்தது. இதற்கு நாட்டின் பல பெரியார்களின் உதவியும், காங்கிரஸ் மகாசபையின் ஆதரவும் கிடைத்தது. ஆசிரியர்களும், மாணவர்களும், தாங்களே தங்களுக்கு வேண்டிய கட்டடங்களைத் தங்கள் உழைப்பாலேயே கட்டிக்கொண்டனர். தொழில் செய்வது மேன்மை என்று அங்கே வற்புறுத்தப்பட்டது.

எமர்ஸனது எழுத்தால் பெரிதும் உந்தப்பட்டிருந்த ஐயரது மனம், அவ்வறிஞர் சுட்டிக்காட்டிய, (authentic man) "முற்றிலும் நம்பத் தகுந்த, ஆன்ம ஆற்றல்உணரும்" மனிதனை உருவாக்கும் லட்சியமாகக் கொண்டது. அந்த நிலைக்குத் தனது குருகுல மாணுக்கர்கள் வளர வேண்டும் என விரும்பினர். அதே நேரத்தில், கொரில்லாப் புரட்சி முறைகள், ஆயுதப்பயிற்சி, அடையாள மொழியைப் பயன்படுத்தல்,

ஆகியவையும், குருகுலத்தில் உண்டு. காலை 4-30 மணிக்கே குருகுலக் கல்வி தொடங்கி, இரவு 9-30 வரை நீடித்தது.

அருமையாக நடைபோட்டு வளந்த இக்குருகுலத்தில் துரதிர்ஷ்டவசமாக ஒரு பூசல் ஒன்று தோன்றிற்று. அங்கே பயின்ற அந்தணச் சிறுவர்களில் இருவரின் பெற்றோர்கள் குருகுலத்தில் மேற்கொண்ட சமபந்திச் சாப்பாட்டினை விரும்ப வில்லை. அந்த இருவருக்கும் வேருகச் சாப்பாடு தரவேண்டும் என்று வற்புறுத்தினர். இந்தச் சிக்கலால், பெரியார் இராம சாமியுடனும் மற்றும் டாக்டர் நாயுடு போன்ற காங்கிரஸ் பெரியோருடனும் அபிப்பிராய பேதம் வளர்ந்தது. ஐயர் அவர் களுக்கு ஆசிரமத்தில் துணையாக இருந்த ஒருவரது விட்டுக்கொடுக்க இயலாத பிடிவாதப் போக்கின் காரணமாக இந்தப் பிணக்கு வலுவடைந்த போது, வாழ்வில் தளர்ச்சியே யடையாத ஐயரும் சிறிது தளர்ந்தார்கள் என்றே எண்ண வேண்டியுள்ளது. குருகுலத்தின் வாயிலாகத் தோன்றிய இச் சிக்கல் காங்கிரஸ் மகாசபையின் உறுப்பினரிடமும் பிளவுகளை உண்டாக்கி விட்டது. குருகுலத்துக்குப் பண உதவி செய்து வந்தவர். இருசார்புகளாகிப் போனதால் ஐயர் அவர்கள் பெரும் தொல்லைக்குள்ளானுர்கள்.

ஐயரைப் பொறுத்த வரையில், சாதிப்பாகுபாடற்ற சமுதாயம் காணுவதே நீதி என்று நம்பினர். ஆனல் அவருக்கு ஏற்பட்ட சோதனையில், பல அரசியல் சோதனைகளை வென்ற அவரால் உடனடியாக ஈடு கொடுக்க இயலாதபடி, உடனிருந் தோர் இப்பிளவினைப் பெரிதாக்கி விட்டனர். இந்த சமபந்தி சாப்பாட்டில் அந்தணர், அந்தணரல்லாதர் பாகுபாடில்லை என் பதையும், இரண்டே இரண்டு அந்தணச் சிறுவர்களின் பெற் ரோர்களே மற்றைய அந்தணபெற்ரோரிலிருந்து வேறுபடும் வழியில் நடந்தார்கள் என்பதையும் சுட்டிக்காட்டி, வாதம் செய்ய முற்பட்ட போது, கொள்கைக்காக அவரே தம் குருகுலப் பொறுப்பினை ராஜினமா செய்ய வேண்டிய நிலை வந்தது. ஐயர் அவர்கள் இப்படி விலகிக் கொண்டாலும், குருகுலம் பற்றிய சர்ச்சை பெருகியது. இந்திய அரசியல் உலகையே அது உலுக்கியது.

சிக்கலெல்லாம் தீர்ந்து ஒரு நல்ல முடிவு ஏற்பட்ட இருந்த அந்த சந்தர்ப்பத்தில் ஐயர் அவர்கள் தமது மாணக் கருடன் தாம்பிரவருணியில் கல்யாண தீர்த்தம் கரைக்கு,

மகிழ்ச்சிச் செலவு சென்ற போது, நீர்ச்சுழலில் தடுக்கி விழுந்த தன் மகளைக் காப்பாற்றக் குதித்த போது அவரும் உயிரிழக்க நேரிட்ட செய்தி, இந்தியா முழுவதையும் உலுக்கி விட்டது. 1925 ஜூன் நான்காம் நாள், வீரவிளக்கு வ. வே. சு. தன் தியாக ஜோதியை நிறுத்திக் கொண்டு நீர்த்திரளுடன் நீங்காது கலந்து விட்டது,

தேசபக்திக்கனலாகவும், தியாகச் செம்மலாகவும் பன்மொழிப் புலவராகவும், வீரவிளக்காகவும், இலக்கிய மேதையாகவும், ஒப்பற்ற புனித வாழ்க்கை வாழ்ந்து காட்டிய வா.. வே. சு வின் மறைவுக்கு ஆற்ருமல் பாவேந்தர் பாரதிதாசன் இரங்கிப் பாடிய குரல் பேசிற்று:

“கேட்பீரோ தமிழர்களே, நம்மில் மிக்க
கீர்த்திகொண்ட தமிழனுயிர்நீத்த செய்தி
ஆட்பணிதல் கடவுளொருவனுக்கே யன்றி
அத்தனைபேரும் சமமே ஆகும் என்றும்
மாட்சி மிகும் எண்ணத்தால் நாட்டில் மீண்டும்
மலர்வித்த வீரர்க்குள் வீரன் கண்டீர் !
தாட்டிகஞ்சேர் சுப்ரமணிய ஐயன் இந்தச்
சகம் நீத்தால் தமிழர் மனம்
சகிப்பதுண்டோ?

நன்னாட்டிற் கவன தொண்டு பெரிது; வேரில்
தண்புனலைப் பாய்ச்சிடுமோர் தியாகம் என்னில்
அன்புடைய திருள் கொண்ட நெஞ்சம் தன்னில்
அணை கடந்த வெள்ளம்போல் தேசபக்தி
நன்றுவளர்விப்பது; நாம் என் செய்வோமால் !
நலம் விளைக்கும் கற்பகத்தைப் புதுநினைப்புக்
குன்றத்தை குன்றஞ்சார் குளிர் புனல் தான்
கொண்டதுவோ? பலகை வருளம் குளிர்ந்ததேயோ.

வாழ்க வ. வே. சு !

வளர்க அவர் புகழ் !

வ. வே. சு. ஐயர் அவர்கள் கண்ட கம்பன்

இம்பர் நாட்டில் செல்வம் எல்லாம் எய்தி
அரசு ஆண்டு இருந்தாலும்
உம்பர் நாட்டில் கற்பகக்கா
ஓங்கும் நீழல் இருந்தாலும்,
செம்பொன் மேரு அனைய புயத்திறல சேர்
இராமன் திருக்கதையில்
கம்பநாடன் கவிதையில் போல்
கற்றோர்க்கு இதயம் களியாதே.

இப்படித்தான் கம்ப இராமாயணத்தின் சிறப்புப் பாயிரமொன்று கம்பன் தரும் இராம காதையின் மேன்மையை எடுத்தியம்புகின்றது. மக்களின் அறிவினைப் பேணி, மயர் வினைப்போக்கி, வீடும் தர ஆற்றலுடையதாய்த் திகழும் கம்பனின் இராம காதைப் பாக்கள், 'இன்னமுதமே' என்றும், இத்தகைய அமுதினைத்தந்தது பெருங்கொடையே என்றும் பேசும் பாயிரச் செய்யுள்களுள்ளே இந்தச் செய்யுள், அநுபவத்தால் ஓர்ந்த, உயர்ந்ததோர் உண்மையைச் சுட்டிக் காட்டுகின்றது.

இவ்வுலக வாழ்க்கையயின் பொருள்முதல் வாழ்வின் எந்த மேலான பதவியும் சரி, அல்லது தேவருலகு என்று அழைக்கப்படுகின்ற, சாவாமைப் பேற்றோடு பொலியும் அமரர் வாழ்க்கையின் அநுபவமான ஓங்கு கற்பக நிழலும் சரி, கற்றோர்க்கு கம்பன் கவி தரும் களிப்பினைத் தர இயலவில்லையாம்! எவ்வளவு பெரிய பெருமையைக் கம்பன் கவிக்குத் தருகின்றது! கற்றோர்க்கு மகிழ்ச்சியளிக்கும் இந்தச் செயல் 'எத்தனை பெரியது, நுட்பமானது, நிலைத்தது' என்பதை உணர்பவன் மிகச் சிறந்த "கவிதை ரஸிகன்"; "பயில்வோன்"; "திறம்மிக்க இலக்கியத்திறனாய்வாளன்", என்பது, இப்பாடலால் நாம்வருவித்துப்பெறும் பொருள்.

'கல்வியிற்பெரிய' கம்பன் என்றே அறிஞரால் போற்றப்படும் கம்பனின் கவியின் மேன்மையினை எடுத்தியம்பும் இந்தச் செய்யுள் உயர்வு நவிற்சியல்ல; தீர்க்கமான உண்மையே; என்பதை வ. வே. சு. ஐயர் அவர்களின், கம்பனின் இராம

காதை ஆய்வினை ஊன்றிப்படிப்பவர், நிச்சயமாக உணர்வார்கள்.

ஐயர் அவர்கள் பெல்லாரி இருஞ்சிறையில் (1922) இருந்த ஒன்பது மாதங்களில் பல நூல்களையும், நம் நாட்டு மொழிகளில் பலவற்றில் பயிலும் இராமாயணங்களையும் ஒப்பிட்டுப் படித்து ஆய்ந்து, கம்பனின் இராமகாதையை உலகறியச் செய்ய வேண்டிய அவசியத்தால், உந்தப் பெற்று ஆங்கிலத்தில் எழுதித் தந்துள்ள அந்த ஆய்வு நூல், நமது காலத்தில் நிகழ்த்தப் பெற்றதோர் இலக்கிய சாதனையேயாகும் அந்த நூலிலே விரிவது, 'கல்வியிற் பெரிய' கம்பனின் கவி கற்றோரின் இதயத்தை, எப்படிக்களிப்பிக்கின்றது என்று தரும் அநுபவமே. வ. வே. சு. ஐயர் அவர்களது புதுவை வாழ்க்கையின் போது கிடைத்த இலக்கிய சர்ச்சையில், ஐயர் அவர்களின் ஆழ்ந்த பன்மொழிக் கல்விப்புலமையின் தெளிவோடு எடுத்தோதப் பெற்ற உண்மையைத் தானே பாரதியும் பேசினான்:

"யாமறிந்த புலவரிலே
கம்பனைப் போல், வள்ளுவன் போல்,
இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை ..." என்று

இந்த உணர்வின் தெளிவால் தானே அழுத்தமாகச் சொன்னான், "எல்லையொன்றின்மை எனும் பொருள் அதனைக் கம்பன் குறிகளால்" காட்டும் அற்புத முயற்சியே கம்பன கவி யென்று?

இத்தகைய பாராட்டுக்கள் "உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை" என்று நிலை நாட்டுகின்றது. ஐயர் அவர்களது கம்பராமாயண ஆய்வு. இந்த நூற்றாண்டின் முதல் கால் பகுதிக் காலத்தில், தமிழின் உயர்வை, தமிழ் இலக்கியத்தின் உயர்வினைத் தமிழரே சரியாக உணராமல், தமிழ்க் கல்வி ஆழமாகவோ அகலமாகவோ ஆங்கிலக் கல்வி பயிலப் பெறும் அளவுக்குப் பயிலப்படாதிருந்த நாளில், தமிழில் இலக்கியத் திறனாய்வின் முன்னோடியாய் வந்து, தமிழ்க்கவியின் பெருமையையும், தமிழ்க்காப்பியத்திறனையும், உலகம் காணச் செய்த பெருமுயற்சி அது, அந்த நூலின் வெற்றி, மேனாட்டு, இந்நாட்டு மொழிகள் பல கற்றுத்தெளிந்த, காப்பிய ரசிகனின் சுவை காணும் திறனின் வெற்றி.

காவியச் சுவை காண விழையும் பயில்வோன் ஒருவன், அச்சுவைபெற காவியத்தினை எத்தகைய மனப்பாங்குடன் அணுகவேண்டும் என்பதை வ. வ. சு. ஐயர் அவர்களது சேரமாதேவி குருகுலத்தினின்று வெளிவந்து கொண்டிருந்த "பாலபாரதி" என்ற மாத இதழில் (1924ல்) வெளியிடப்பட்டுள்ள ஐயர் அவர்களின் கட்டுரை ஒன்றிலிருந்து தெரியலாம். "காவிய உத்தியானம்" என்ற தலைப்பில் ஐயர் அவர்கள் அநுமைப்பாட்டோடு எழுதியுள்ள அக்கட்டுரையின் தொடக்கத்தையே பாருங்கள் :

"சாமானிய ஜனங்களுக்கு நித்திரைச் சுகத்தையும் காதற் சுகத்தையும் விட்டால் வேறு சுகங்களின் சுவைதெரிவது கிடையாது. பயிற்சி சிறிது பெற்றவர்கள் கான சுகத்தை அனுபவிப்பார்கள். அதனினும் சிறிது அதிகமான பயிற்சி பெற்றவர்கள் சித்திரங்களையும் சிற்பங்களையும் பார்த்து ஆனந்தமுறுவார்கள். ஆனால் நூல்களை — உயர்ந்த ரஸம் நிறைந்த நூல்களை அநுபவிக்கத் தெரிந்தவர் மிகவும் சிறுதொகையினரேயாவர். உயர்ந்த நூல்கள் அறிவாளிகளுக்குத் தரும் சுகத்திற்கு மற்றைய சுகங்கள் எள்ளவும் ஈடாகா. மற்ற ஒவ்வொரு சுகங்களும் எப்பொழுதும் அநுபவிக்கத் தகுந்தன அல்ல — நசுவரமானவை — சீக்கிரம் தெவிட்டிப் போவன — ஓர் அளவுக்கு மேல் சென்று விட்டால் அவை பெரும் கஷ்டத்தைத் தந்து விடும். ஆனால் நூற் சுவையோ எப்பொழுதும் அனுபவிக்கலாம். நவில்தோறும், செவ்விய நூல்களின் நயம் வளர்ந்து கொண்டேபோகும். நூல்களை அளவுக்கு மிஞ்சிப் படித்துக் கெட்டவரை நாம் பார்த்ததில்லை. மகா ரஸிகனான உமர்கையம் (Omar Khayyam) என்பவன் ஒரு பெயர்போன கவியில் சுகவெறியைப் பூரணமாக அனுபவிப்பதற்கு ரமணீயமான உத்தியானத்தில் ஒரு கலசம் நிறைய மதுவும், காந்தை ஒருத்தியும், ரஸமுள்ள ஓர் நூலும் தேவை என்று எழுதுகிறான். நூல்களில் பொதிந்துள்ள சுவையைப்பற்றி சமஸ்கிருதக் கவிகளும், தமிழ்க் கவிஞர்களும் வேண்டிய அளவுக்குப் புகழ்ந்திருக்கிறார்கள் .."

கவியின் சுவையைப்பற்றி, இப்படிப் பேசிய பின்னர் ஐயர் அவர்கள் தக்க மேற்கோள்கள் தமிழ்ப் புலவர்களிடமிருந்தே தந்து, நம்நாட்டு மூதறிஞர் காவியச்சுவையை எப்படி உணர்ந்துள்ளனர் என்று எடுத்துக் காட்டுகின்றார். பிறகு, உலகின் பல்வேறு மொழிகளின் உயர்ந்த இலக்கிய கர்த்தாக்

களின் நூல்களின் சாராம்சத்தைத் தந்து, அவற்றையெல்லாம் ஆழ்ந்து படிக்க வேண்டுகிருர்கள்.

இந்தக் கட்டுரையில் ஐயர் அவர்கள் சுட்டிக்காட்டும் பெயர்களுள்ளே காப்பியப் புலவர்களான 'ஹோமர்' 'மில்தன்', கிரேக்க அறிஞர் 'எஸ்கூலன்' (Aeschylun) "ஸோபோகிளன்" Sophoclen), பிரெஞ்சு அறிஞர் 'கோர்னே', ராஸீன், இத்தாலிய 'அல்பியேரி', ஜர்மானிய 'கீதே', 'ஷில்லர்', ஆங்கிலேய 'ஷேக்ஸ்பியர்' ஆகியோரும் உள்ளனர். இந்தச் சான்றுகள் ஐயர் அவர்களின் பரந்த, ஆழ்ந்த புலமையினைத் தெளிவாகவே புலப்படுத்துகின்றன. ஆகவே ஐயரவர்கள் இந்தத் திறமான புலமை தரும் தெளிவினுல், கம்பனை ஆய்ந்து, அவர்கள் கண்ட சுவையினை எடுத்தியம்பும் போது, அவர்களது எழுத்துக்கு ஒரு அதிகாரபூர்வ வலு வந்துவிடுகிறது என்பதை மறுப்பதற் கில்லை. மேநாட்டுக் காப்பியங்களான 'ஹோமரி'ன் 'ஒதிஸ்ஸி' 'இலியாத்', 'வர்ஜில்' என்பாரின் 'ஏனியத்', ஆங்கிலக்கவி 'மில்தனின்' 'சுவர்க்க நீக்கம்' 'சுவர்க்கமீட்பு', இத்தாலியக் கவி 'தாந்தே'யின் அமரகாவியம், வடமொழிக்காப்பியங்களான வான்மீகியின் இராமாயணம், வியாஸரின் 'பாரதம்' பாகவதம், தெலுங்கு மொழி, கன்னட மொழி, இராமாயண பாரதங்கள், துளஸீ தாசரின் அவதீ இராமசரிதம் — ஆகிய பல திறப்பட்ட பலமொழிக் காப்பியங்களையும் பயின்று, கம்பனேடு ஒப்பிட்டுக் கம்பன் கவியில் திளைக்கிருாகள் என்பது வ. வே. சு. அவர் களின் இந்த ஆய்வினுல் விளங்குகிறது.

இனி ஐயர் அவர்கள் இந்த கம்பராமாயண ஆய்வினைத் தந்துள்ள முறைமையைப் பார்ப்போம்:

முன்னுரை, இராமகாதையின் சுருக்கம், செயல்பாட்டின் அல்லது நிகழ்ச்சியின் இடையிலிருந்து கதையை விவரிக்கும் முறை, கம்பன் தந்துள்ள கதைக் கட்டுக்கோப்பு, இயற்கை கடந்த செயல்களும், அவற்றைத் தரும் பாத்திரங்களும், பிறகு, பாத்திரங்கள் .... என்று இந்த முறைமை அமைந்துள்ளது.

கம்பன் இராமகாதையை வான்மீகியின் வடமொழி மூல நூலினின்று பெற்று, 'தெய்வமாக்கவியாக', 'தொடை நிரம்பிய தோமறு மாக்கதையாக'ப் பாடியுள்ள தன்மையின் சிறப்பை முதன் முன்னரே வ வே. சு. ஐயர் அவர்கள் எடுத்துக் கூறு வதாவது;

"உலக இலக்கியங்களுக்குள்ளே, அமரத்வம் வாய்ந்து தமக்கு ஈடில்லை என்று பேசப்பெறும் தகுதி வாய்ந்த, இலக்கிய நூல்களின் வரிசையில் முதன்மையாக வைத்து எண்ணத்தகுந்தது கம்பனின் இராமாயணம்; இராமகாதையைப் பாடல்களாக வடித்துத்தந்திருக்கும் கம்பனின் இக்காப்பியம், ஐரோப்பிய நாட்டின் நாகரிகத் தொட்டில்களாகக் கருதப் பெற்ற, பண்பாடு மிக்க தொன்மையான நாகரிகத்தின் எடுத்துக் காட்டென்று கூறப்படும், 'இலியத்', 'எனியத்' ஆகிய காப்பியங்களையும் தன் கலைச்சுவையில் அறை கூவி நிற்கிறது. அதனோடும் அமையாது, அதன் மூல நூலான, உலகின் ஆதிகாவியம் என்றும், முதன்மைக் காப்பியம் என்றும் அழைக்கப்படுகின்ற வான்மீக இராமாயணத்தையும் விடப் பெருமை வாய்ந்தது

இதுவே ஆழ்ந்திருக்கும் கவியுளம் காணும் உள்ளமும். பன்மொழிப் புலமையும், இலக்கிய நயம் நுகரும் நுண்மான் நுழை புலமுமிக்க வ. வே. சு. ஐயர் அவர்களது, கணிப்பு. இது, தன்னுடைய தாய்மொழி இலக்கியம் என்பதாலோ வெறும் தேச, மொழிப் பற்றுக்களினால் தூண்டப்பட்டதாலோ வெளி வந்த அபிப்பிராயமன்று. பல ஆண்டுகளின் ஆய்வினால், தெளிந்த படிப்பினால், பிறமொழி இலக்கியப் பயிற்சியினால் பெற்ற அநுபவத்தால் தோன்றிய உண்மைக்கூற்றே என்று ஐயர் அவர்கள் கோடிட்டுக்காட்டுகிறார்கள்.

தம்முடைய ஆய்வுநூல் தாம்கூறும் இந்த கூற்றின் உண்மையையே நிரூபிக்க முயல்கிறது என்றும் தெரியப்படுத்துகிறார். இந்த வகையில் ஐயர் எடுத்து விளக்கும் பல கோட்பாடுகளில் சிலவற்றையாவது நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

வேற்றுமொழி மூல நூலிலிருந்து தன் மொழியில் ஒருகவிஞன், மொழிபெயர்த்துத் தரும்போது அவனது இயல்பான உள்ளொளியால் கிடைக்கும் 'கவி வீச்சு', அவ்வப்போது மூலக் கருத்துக்களையும், மூலநூலின்படிமங்கள் முழுவதையும் அப்படியே தவறாமல் தரவேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியால் தடைப்படுகிறது. இதனால் கவிபாடும் வேகம் தளர்கிறது. அதனோடு மூலநூலின் பண்பாகத் திகழும் 'பயில்வோன் —கவிஞன்' நெருக்கமும் நீங்கி விடுகிறது. இந்தக் கஷ்டத்தைத் தான் கோலரிட்ஜ் என்ற ஆங்கில அறிஞன் குறிப்பிடுகிறான் என்று கூறி ஐயர் அவர்கள், தமது வாதத்தை அரண் செய்கிறார்கள்.

இந்திய நாட்டின் பல்வேறு மொழிகளில் தோன்றியுள்ள இராமாயண, பாரத காப்பியங்கள் வடமொழி மூலத்திலிருந்து கதையம்சத்தையும் போக்கையும் பெற்றுக்கொண்டு, அந்தந்த மொழிகளில் இயல்பாக, புதிதாகப் படைக்கப்பெற்ற காப்பியங் களாகவே மலர்ந்துள்ளன. இவைகளெல்லாம் மூல நூற் களின்று, விலகி நின்று, சுயேச்சையோடு தம் தம் காப்பியப் பணியை நிறைவேற்றுவதைக் காணலாம்.

பெருந்தேவனாரின் தமிழ் பாரதமும், தமிழிலே தோன்றி யுள்ள மற்றைய இராமாயண, பாரத, கந்தபுராண, பாகவதக் கதைகளும், தெலுங்கு மொழியில் நன்னயா, திக்கன்ன ஆகியோர் தந்துள்ள பாரதமும், துளஸீ தாசரின் அவதீ இராமாயணமும், கன்னட மொழி இராமாயணமும், இந்த வகையைச் சார்ந்தவை. அவைகளெல்லாம் மூல நூலிலிருந்து கதையம்சத்தையும், சில சம்பவங்களையும் கிரகித்துக்கொண்டு, அவற்றைக் கூட்டியோ, குறைத்தோ, வழி நூல், ஆசிரியரின் மனோதர்மத்தோடும் கலந்து புதிய படைப்புக்களாகவே தோன்றியுள்ளன. இந்த முறையைக் கையாளுவதால் மேனாட்டில் புலவர்கள் காப்பிபங்களை மொழி பெயர்ப்பதில் எதிர்கொள்ளும் முன்னர், குறிப்பிட்ட அக்கஷ்டத்தை வெல்ல முடிகிறது என்பதே ஐயர் அவர்களின் கணிப்பு.

நம் நாட்டு இராமாயண, பாரதக் கதைகளை இப்படி இந்த நாட்டின் எந்த மொழியில், எந்தக் காலத்தில் எழுதினா லும், அந்த எழுத்துக்கு மற்றொரு சிறப்பான பண்பும் உண்டு. அதாவது, ஐரோப்பிய நாட்டு காப்பியக் கதைகளான இலியத் திற்கும் 'ஏனியத்' திற்கும் இல்லாத பண்பு, மேனாட்டுக் காப்பியங்களில் சந்திக்கும், "மினர்வா", "ஜுபிடர்", "ஹெர்குலிஸ்", "ஹெக்டார்", "கஸாண்ட்ரா" போன்ற பாத்தி ரங்களை, நல்ல மொழி வளமும் இலக்கியப் பயிற்சியுமுடைய வாசகர்களே அறிய முடியும். தவிரவும் 'இலியத்' காப்பியத்தி லும் ஏனியத் காப்பியத்திலும் குறிப்பிடப்பெறும் சமய வாழ்க்கை, அவற்றை தம் தம் மொழியில் பெயர்த்தெழுதிய ஐரோப்பிய நாட்டவர் காலத்தில் வழக்கில் இல்லை.

மாறாக, இந்திய மொழிகள் எவற்றில் இராமாயண, பாரதக் கதைகளைத் தந்தாலும், எந்தக் காலத்தில் தந்தாலும் அவற்றில் வரும் பாத்திரங்களின் சமயமும் வாழ்க்கையும் இப்போதும் நிலவுவதால், சீதையையும், திரௌபதியையும்,

இராமனையும், கண்ணனையும், அநுமனையும், தருமனையும், அவர்களைப்போன்ற மற்றையோரையும், படித்தவரன்றி, மற்றையோரும் எளிதில் கண்டுகொள்வார்கள். அவர்களது கஷ்டங்களிலும், இன்பங்களிலும் தங்களையும் ஈடுபடுத்திக்கொண்டு ஒன்றிவிடுவார்கள். ஐரோப்பா முழுவதையும் ஒன்றுபடுத்தும் வகையில் ஆப்ரஹாமைப் பற்றியோ, ஏசுவைப் பற்றியோ, இதுபோலப் பழைமையான காப்பியக்கதை இருந்திருக்குமானல், இன்று அதை தம் தம் மொழியில் தரும் ஐரோப்பிய நாடுகளின் இலக்கிய கர்த்தாக்கள், மேலே சொல்லப்பட்ட இந்திய வழியினையே கையாளுவார்கள் என்பது ஐயர் அவர்களது துணிவு.

கம்பனைப் பொறுத்த வரை, வான்மீகத்திலிருந்து பல நுணுக்கமான விபரங்களை, ஒன்றும்விடாமல் கதையம்சத்தோடு தான் பெற்றாலும், கதையைத்தான் நடத்திச் செல்லும் பாங்கிலும், தனது பாட்டுடைப் பொருளையும், தலைவனையும் படம் பிடித்துக்காட்டும் போக்கிலும், உணர்ச்சிமயமான ஒருமைப்பாட்டோடு கவி சொல்லும் ஆற்றலிலும், தனது மூல நூலையே, உறுதியாக அறைகூவி நிற்கிறன் என்பது வ. வே. சு. ஐயர் அவர்களின் முடிவு.

திறனய்வுத் துறையில் தெளிவுற்ற கல்வியாளர்கள், இந்தியாவிலோ, மற்றைய நாடுகளிலோ உள்ளவர்கள் கம்பனின் நூலைப் பயின்றால், அறிவுத் தெய்வமான கலைமகள் பெற்றுத் தந்துள்ள கலைநுட்பச் செல்வர்களுக்குள்ளே தலையாய இடத்தை கம்பனுக்குத் தருவது திண்ணம் என்று அவர் கருதுகிறார். தமது இந்தத் தீர்மானமான கணிப்பினை அறிஞர் பெருமக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையிலே, பதினயிரத்திற்கு மேற்பட்ட பாடல்கள் கொண்ட கம்பனது இராமாயணக் காப்பியத்தினின்று ஏறத்தாழ நாலாயிரம் பாடல் வரை மொழி பெயர்த்துத் தந்து, தமது ஆய்வினை, நடத்துகின்றார்கள்.

கம்ப இராமாயணக் கட்டுக்கோப்பினைப்பற்றி (archilectonics) ஐயர் அவர்கள் கூறும் கருத்துக்களில் முதன்மையானது, காப்பிய நிகழ்ச்சிகளைக் கூறும் முறையில் மேனாட்டவருக்கும், நம்நாட்டவருக்கும் உள்ள வேறுபாடொன்று.

மேநாட்டவர் பெரும்பாலும் அரிஸ்தாத்தில் என்ற கிரேக்க அறிஞன் வகுத்துக்கொடுத்தக் கோட்பாட்டின்படி,

தமது கதை நிகழ்ச்சியைத் தொடங்கும் போது, முடிவுக்கு எவ்வளவு அருகாமையில் இருக்க முடியுமோ அவ்வளவருகில் நின்று, கதையைத் தொடங்கி நடத்திச் செல்கின்றனர். இம்முறை ஐரோப்பிய மொழிகள் அனைத்திலுமுள்ளது. நிகழ்ச்சி அல்லது பேச்சு ஒன்றின் இடையிலே காட்சியைத் தொடங்கி, சில கோவைகள் தந்து, பின்னோக்கி காட்சிகளைச் செலுத்திப் பின்னர் முடிவை நோக்கிக் கதையை திருப்புவர் ஆனால் இந்தியக் கவிகள் வரலாற்று ரீதியிலே கதையை நடத்திச் செல்கிறார்கள். அதாவது பாட்டுடைத் தலைவன் தோற்றம், வளர்ச்சி, செயல்பாடுகள், வெற்றி — என்ற போக்கிலே அமைத்தல். இந்த முறையில் சொல்வதால் கதை நிகழ்ச்சி வளரும் போக்கிலோ அல்லது பயில்வோனின் உணர்ச்சிகளைக் காப்பியத்தின்பால் நிலைத்திருக்கச் செய்யும் முயற்சியிலோ தடைகள் தோன்றுவதில்லை. இடையில் கதையைத் தொடங்கிப் பின்னோக்கியும், முன்னோக்கியும் செல்லும் முறையில், கவியின் ஆற்றலைப் புலப்படுத்த வாய்ப்பிருப்பது உண்மையேயானாலும், இந்தியமுறையின், சுவை தேயாமல் கதைதானே, இயல்பாய் ஊட்டம் பெறும் பாங்கு போற்றுதற்குரியதெனவே ஐயரவர்கள் கருதுகிறார்கள்.

இயற்கை கடந்த அதீத நிகழ்ச்சிகளையும், தெய்வச் செயல்கள் என்று பேசத்தக்கவைகளையும், அவற்றை இயக்கும் ஆற்றல்கள் அல்லது தேவர்கள் கதை நிகழ்ச்சியில் பங்கு கொண்டு, காப்பிய மாந்தருக்குத் துணை நிற்கும் அம்சங்களை (Supernaturalism) ஐயர் அவர்கள், இந்தியப் பண்பாட்டினை அறியாதவரும் புரிந்து கொள்ளும் வகையிலே, விளக்கியுள்ளார்கள். 'அசுரர்', 'தேவர்'', விஷ்ணு', 'சிவன்', 'பிரும்மா', வானரர் பற்றியும் அரக்கரின் மாயச் செயல்கள், தேவரின் ஆற்றல்கள்-ஆகியவைபற்றியும், நுட்பமாகச் சொல்லிக் கம்பன் மானுடத்தையும், இறைமையையும் கலந்து தரும், அவனுக்கே உரிய ஆற்றல் பற்றியும் அழகாக எடுத்துரைக்கின்றார்.

கம்பனின் யுத்தகாண்டத்தை விளங்கிக் கொள்ள மேனாட்டவருக்குத் தேவையான கல்வியில், 'அஸ்திரம்' பற்றிய அறிவு முக்கியமானதல்லவா? அதை ஐயர் அவர்கள் எப்படித் தருகிறார்கள் பாருங்கள்:

"வில்லிலே அம்பினை காட்டி, குறிவைக்கும் போது ஒரு தெய்வத்தினை நினைத்து அல்லது அத்தெய்வம் தந்துள்ள

பேற்றின் துணையால் மந்திரத்தினை உச்சாடனம் செய்து, அவ் வம்பிற்கு இயற்கை கடந்த தெய்விக ஆற்றலை ஊட்டி, தெய்வப் படைக்கலமாக மாற்றுவதே; அஸ்திரம் செலுத்துதல் ஆகும்". அக்கினியின் துணையால் "ஆக்னேய அஸ்திரமும்", பரமசிவத் தின் துணையால் 'மகேஸ்வர அஸ்திரமும்' விஷ்ணுவின் துணை யால் "நாராயண அஸ்திரமும்" இப்படித்தான் வடிவாகின்றன. ஆகவே நாகாஸ்திரத்தின் ஆற்றலை நீக்க கருடன் வந்துதவ வேண்டும்; மாயைப் படையை அறிவுப் படை வெல்ல வேண் டும்...."

நடுவு நிலைமையினின்று விலகாமல் நின்று, தமது விளக்கங்களைக் கேட்பவர் தெளிவாகக் கம்பனைப் பயில வேண் டும் என்ற பெருநோக்கோடு ஐயரவர்கள் தமது ஆய்வு நூலை ஆக்கித்தந்துள்ளதை நாம் நினைவு கொள்ள வேண்டும்.

இனி, இப்பாத்திரப் படைப்பில் கம்பன் உலக மகாகவி யாக விளங்கும் திறத்தினை ஐயர் அவர்கள் நிலைநாட்டும் எழுத்து நெறியினைச் சிறிது நோக்கலாம்.

கம்பனின் 'இராமன்', 'பரதன்', 'இலக்குவன்', 'இராவணன்', 'இந்திரசித்து', ஆகியோரை தனித்தனியாகவும், 'கும்பகர்ணனையும் வீடணனையும்' சேர்த்தும், 'வாலியையும், சுக்ரீவனையும்' சேர்த்தும், ஐயர் அவர்கள் ஆய்ந்துள்ளார்கள். மேலும் 'வாலிவதை,' 'இரணியவதைப்' படலங்களை மிகத் தெளிவாக விமர்சனம் செய்கின்றார்கள். இந்த முறைமையினால் ஐயர் அவர்கள் காப்பியத்தின் ஒருமைப்பாட்டை பயில்பவர் மனத்தில் பதியச் செய்ய மேற்கொள்ளும் முயற்சியும் தெளிவா கின்றது.

கம்பன் படம் பிடித்துக்காட்டுகின்ற இராகவன் வான்மீ கத்து இராகவனின்றும் நிச்சயமாக மேம்பட்டவன் என்று நிறுவுகிறார்கள் ஐயர் அவர்கள். கம்பனது இராமனிடத்திலே ஒருவன் காண்பது: அடைக்கலம் தந்து காக்கும் அன்பு நெறியாளன் — சரணாகதவத்ஸலனை, அறந்தலை நிறுத்தும் சத்தியக் கருவியான 'கோதண்டம்' தாங்கிய வில்லியாம் அறம் வளர்த்த நம்பியை அன்பும், அறமும் பொங்கித் ததும்பி நிற்கும் இந்தப் பேராற்றலே 'இராமன்' என்ற 'வியக்தி'யின் ஆன்ம சொரூபம். அவனது சமுதாய சோபையே சத்தியம். அவனது அவயவ சோபையே ஆற்றல். இவற்றின் கலப்பால் வடிவாவதே அவனது அருள். அதுவே அவனது இறைமை

இப்படி விளக்குகின்ற பாங்கில்தான் ஐயரவர்களது இராமனைப் பற்றிய கட்டுரை இயல் விரிகிறது.

கம்பனின் இராமன் வான்மீகியின் இராமனினிலும் உயர்ந்து நிற்பது போலவே கம்பனின் மற்றையப் பாத்திரங்களும் — இராவணனும், மண்டோதரியும், இந்திரஜித்தும் கும்பகர்ணனும் கூட — வேருக நிமிர்கின்றனர். இத்தகைய படைப்பு, கம்பனின் காப்பியத்தின் கலைச் சுவையின் அவசியமாகிறது. இதுவே ஐயரவர்கள் கண்டு கொண்டது. ஆகவே அவர்கள் கூறுகிருர்கள்: 'வால்மீகியைக் கம்பன் விஞ்சுகிருன்' என்று. சான்ருக வான்மீகியின் பரதன் மிக உயர்ந்த படைப்பேயாளுலும், கம்பன் தனது காப்பியத்தில் பரதன் என்ற அந்த அற்புத வடிவிற்குத் தந்திடும் சில நுட்பமான அம்சங்கள், அந்தப் பாத்திரத்தின் ஒளியை மிகுதியாக்கியிருப்பதைக் கவனிக்க வேண்டும். இது கம்பனுக்குக் கைவந்த கலை.

இப்படிப் பல சான்றுகளை, தமது மொழி பெயர்ப்புப் பாடல்கள் துணைக்கொண்டு தந்து, கம்பனின் உயர்வை புலப்படுத்துகின்ருர் வ. வே. சு. அவர்கள். அவற்றின் வாயிலாக, வான்மீகி தம் காப்பியத்தில் காட்டும் தலைவனைவிட கம்பனது காப்பியத் தலைவன் பல்லாற்ருனும் மேம்பாடுடையவன் என்பதை ஐயர் அவர்கள் உறுதியாகக் கூறுகிருர்கள். "நாம் கம்பனிலிருந்து தந்துள்ள மேற்கோள்களிலிருந்து, கம்பனின் இராமன், வான்மீகியின் இராமனைவிட பல்லாற்ருனும் உயர்ந்து நிற்கிருன் என்பதை வான்மீகியினிடத்தில் ஒரே சார்பாகப் பற்றுக் கொண்டுள்ளோரும் ஏற்றுத்தானே ஆகவேண்டும்"— என்று கேட்கிறது நேர்மைமிக்க வ. வே. சு. ஐயரின் அடிமனம்.

கம்பனிலிருந்து வான்மீகி வேறுபடும் பல அம்சங்களில் ஒன்று பாத்திரங்களின் பண்புகளை வடிவாக்கும் பாங்கு. ஐயர் அவர்கள் பல சான்றுகளைத் தருகிருர்கள். அவற்றில் ஒன்றை இங்கு நாம் கவனிக்கலாம்:

அண்ணன் வாலி, தம்பி சுக்கிரீவனுடன் தீவிரமாகப் பொருதுகொண்டிருக்கும்போது, சற்று அப்பால், விலகி இருந்த இலக்குவன், 'சுக்கிரீவன் தன் மூத்தவனின் உயிர் முடிக்கும் வகையிலே' இராமனைக் கொண்டு நிறுத்தியிருக்கும் செயலைக் குறைகாணும்போது கம்பனின் இராமன் பேசுகிருன்:

'அத்தா! இது கேள்' என, ஆரியன் கூறுவான், 'இப்
பித்து ஆய விலங்கின் ஒழுக்கினைப் பேசல் ஆமோ?
எத் தாயர் வயிற்றினும், பின் பிறந்தார்கள் எல்லாம்
ஒத்தால், பரதன் பெரிது உத்தமன் ஆதல் உண்டோ?

இந்தக் கட்டத்தில் இராமன் குறிப்பால் இலக்குவனைக் கடிந்து கொள்ளும் நுட்பத்தைக் கவனிக்க வேண்டும். இலக்குவன், தன் அண்ணன் இராமன் பால் காட்டும் அன்பும், பக்தியும், பற்றும் கருதி வடிவெடுத்த ஒரு வகைப் பெருமையின் பிரதிபலிப்பே இலக்குவனின் இந்தச் சொல் என்ற பொருள் தொனிக்கின்றது. அதாவது பரதனைப் பாராட்டும் முகத்தான் இராமன் தன் சொற்களிலே, இலக்குவனின் மிகுதிப் படுத்தப் பட்ட பெருமையை — அவனுகவே காட்டியவொன்றை — கூருமல் கூறி கடிந்து கொள்ளும் நயம், இனியது. அந்நயம், இராமனின் பண்பு நலத்திற்கு இயைந்தது. இந்த கருத்தினைக் கம்பன் வான்மீகத்திலிருந்துதான் பெற்றுள்ளான் என்ருலும், கம்பன் இந்த நிகழ்ச்சியை அமைத்துள்ள பாங்கு வேறுபட்டது என்பதை ஐயரவர்கள் விளக்குகின்ருர்கள்.

வான்மீகியின் இராமாயணத்தில் இராமன் இலக்குவனிடம் பரதனின் உயர்பைப் பற்றிப் பேசுவதாக வரும் செய்யுள் அடிகள், வீடணனுக்கு அடைக்கலம் தருவதா, வேண்டாமா என்ற சர்ச்சையில் இராமனும் வானரத் தலைவர்களும் ஈடுபட்டிருந்தபோது வருகின்றன. சுக்கிரீவன், இலக்குவன் இருவரையும் நோக்கி வான்மீக இராமன் அப்போது பேசுகிருன் "குழந்தாய், எல்லா உடன்பிறந்தோறும் பரதன்போல் ஆவாரோ? அல்லது தந்தைக்கு மகனுயிருப்பதில், எல்லா மக்களும் என்போல்தான் ஆவார்களோ?"

சுக்கிரீவனின் முன்னர், மற்றைய வானரங்கள் முன்னிலையில், இராமன் இலக்குவனுக்குச் சுட்டிக் காட்ட விரும்பும் பரதன, பெருமையில் தொனிகும் இலக்குவனைக் கண்டிக்கும் பாங்கு, இந்த நிலையில் கடுமையாகிவிடுகிறது. தவிரவும், இந்தச் சூழ்நிலையில் இராமன் 'எந்த மகனும்' தன்னைப்போல ஆகமாட்டார்கள் என்று தன்னைத்தானே உயர்த்திப் பேசிக் கொள்வதும் இராமனது பண்பு நலத்தைக குறைக்கவே செய்யும். எனவே, கம்பனின் இராமன் தற்பெருமையை நீக்கி விடுகிருன். இலக்குவனிடம் அவன் தனியாக இருக்கும்போதே, பரதனின் உயர்வை சொல்வதன் மூலமாக, இலக்குவனை — சுக்கிரீவனை ஐயுற்ற இலக்குவனைக் கடிந்து கொள்கிருன்.

இப்படி காட்சிகளைக் காப்பிய அமைதியோடு மூலத்திலிருந்து சற்று வேறுபட்டு — ஆனால் காப்பியத்தை அல்லது பாத்திரத்தை மேம்படுத்தும் நோக்கோடு — சொல்வதிலே கம்பன் கலையின் மாட்சி புலனாகின்றது என்பர் ஐயர்அவர்கள்.

இதேபோல, போர்க்களத்தில் கும்பகர்ண — வீடணன் சந்திப்பும், இரணிய வதைப் படலமும் — வான்மீகத்தில் இல்லாமல் இங்கு காணப்படுவது கம்பனின் கலைமேதையின் வெளிப்பாடே என்று நம்மைத் தெளியவைக்கிறார் வ. வே. சு. ஐயர் அவர்கள் வெளிச்சப்படுத்திக் காட்டும் போது இரணிய வதைப் படலத்தின் முடிவில் வீடணனை, கம்பன் 'மேதாவிகட்கெல்லாம் மேதாவி' என்று அழைப்பதன் உட்பொருளையுணர்கிறோம்; 'நீதியால் வந்ததொரு நெடுந்தரும் நெறியல்லால், சாதியால் வந்த சிறுநெறி அறியான் என் தம்பி' என்று பேசும் கம்பனது கும்பகர்ணனின் குரலின் திட்பத்தை ஓர்கிறோம், வீடணனும், கும்ப கர்ணனும், பிரகலாதனும், கம்பன் தரும் இராம காதையின் வெற்றியின் அழியாத சின்னங்கள் என்பதையும் புரிந்துகொள்கிறோம்.

மூலமும் நடுவும் ஈறும்
இல்லதோர் மும்மைத்தாய
காலமும், கணக்கும், நீத்த
காரணன் கையில், ஏந்தி
சூலமும், திகிரி சங்கும், கரகமும்
துறந்து, தொல்லை
ஆலமும், மலரும், வெள்ளிப் பொருப்பும்
விட்டு, அயோத்தி வந்தான்:

என்று சத்தியப்பொருளை இனங்காட்டும் கம்பனது சொல்லின் செல்வன் அநுமனது, ஒல்காப் பெருமையையும், அவனது இராம பக்தியின் ஆற்றலையும், தருமத்தின் தனிமை தீர்க்கும் பேராண்மையையும், சடாயு பெற்ற 'தெய்வமரணத்' தின் தியாகச் செம்மையையும், சீதை என்ற அருள்புரி தருமத்தின் வதனத்தையும், இராம தத்துவத்திற்குள்ளே தங்களைக் கரைத்துக்கொண்ட பரத, இலக்குவர்களின் தன்மயங்களையும், உயிர்கொடுத்துப் பழிகொண்ட தருக்கினோனை இராவணனின் ஆற்றல்மிக்க உணர்ச்சிவேகத்தையும், அவன் தன் மகன் இந்திரசித்தனின் வீரத்தையும் ஒருங்கே காண வைக்கின்றார் ஐயர் அவர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக இராமனது வெற்றியைக் 'காசில் கொற்றம்'—குற்றமேயில்லாத வெற்றி—

என்று கம்பன் கூறுவது எத்துணைப் பொருத்தம் என்று உணர வைக்கின்றார் ஐயரவர்கள்.

கம்பனிலிருந்து பலப்பல எடுத்துக்காட்டுகளின் துணை கொண்டு மற்றைய கவிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து வ. வே. சு. ஐயரவர்களின் கம்பராமாயண ஆய்வு, கம்பனை உலக மகா கவிகளுக்குள்ளே, தனிப்பெரும் சிறப்பு வாய்ந்த கவிச்சக்கர வர்த்தி என்று நிறுவுகின்றது; கம்பன் என்ற அந்த மகாகவி யின் மனத்தின் ஆழத்தையும் விரிவினையும், நம்பிக்கையோடு தனது ஆழ்ந்த புலமையோடு வெளிப்படுத்த முயல்கின்றது; அதே முயற்சியின் வாயிலாக வ வே. சு. அவர்களின் மனத் தின் விரிவையும், ஆழத்தையும் சேர்த்தே பயிலவைக்கின்றது.

மனித வாழ்க்கையின் மேம்பாட்டுக்கு இலக்கியம் எவ் வளவு தேவையோ அவ்வளவுக்கு இலக்கியத் திறனாய்வும் தேவை என்பதை வ. வே. சு. வின் ஆய்வு மெய்ப்பிக்கின்றது.

இக்கட்டுரைகள் எழுதத்துணை செய்த நூல்கள்

துணை ஆதாரங்கள்

1. *டாக்டர் தி. சே. சௌ. ராஜன்,* **வ. வே. சு. ஐயர்**
கலைமகள் காரியாலயம்,
சென்னை 4, (1946)

2. R. A. Padmanabhan, **V. V. S. Aiyar**, (English)
National Book Trust of India
New Delhi (1980)

3. *பி. ஸ்ரீ.* **நான் அறிந்த தமிழ் மணிகள்**
வானதி பதிப்பகம்,
சென்னை 17, (1971)

4. *சாமி சிதம்பரனார்,* **தமிழ்நாட்டுத் தியாகிகள்**
தொகுப்பு,
T. G. இரகுநாதன்,
ஸதர்ன் கன்ஸெர்ன்,
சென்னை, (1950)

5. *வ. ரா.* **மகாகவி பாரதியார்**
சக்தி காரியாலயம், சென்னை (1941)

6. *யோகி சுத்தானந்த பாரதியார்,* **வீர விளக்கு வ. வே. சு. ஐயர்**
அன்பு நிலையம்,
இராமச்சந்திரபுரம்,
புதுக்கோட்டை, (1947)

7. *புலவர் அரசு,* **வ. வே. சு. ஐயர்**
தென்னிந்திய சைவச்சித்தாந்த
நூற்பதிப்புக் கழகம்,
நெல்லை — சென்னை 1, (1951)

8. **வ. வே. சு. ஐயர் அவர்கள் வாழ்க்கைச் சுருக்கம்,**
வெளியீடு, டாக்டர் V. V. S. கிருஷ்ணமூர்த்தி, (S/o V. V. S. Iyer)
திருவானைக்கோயில், திருச்சி.

இக்கட்டுரைகள் எழுதத் துணை செய்த நூல்கள்.

ஆங்கிலம்:

V. V. S. Iyer, **Kamba Ramayana — A Study,** (in English) [Published by Delhi Tamil Sangam (1950)] Rpt. 1970 Bheven's Book University, Bombay

V. V. S. Iyer: **The Kural** or **The Maxims of Tiruvalluvar** Complete Translation in English Published by Dr. V. V. S. Krishnamoorthy, திருவானைக்கோயில், திருச்சி, 4th edn. (1961)

வ. வே. சு. ஐயர், **மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள்** 4th edn. அல்லயன்ஸ் பிரசுரம், மைலாப்பூர், சென்னை, (1953) (Contains an Introduction by Rajaji & a note on V. V. S. Iyer by Savarkar)

கம்பன் பணியில்
எங்களது அடுத்த வெளியீடு

திரு. பி. ஸ்ரீ. ஆசாரியா அவர்களும்

திருமதி சரசுவதி ராமநாதன் எம். ஏ., அவர்களும்

சேர்ந்து எழுதும்,

" கம்பன் காவியம்

அன்றும், இன்றும், என்றும் "

குறிப்பு: கம்பன் ஓர் தீர்க்கதரிசி. அவனுடைய காவியத்தில் புதைந்து கிடக்கும் அறிவுரைகள் அனைத்தும் மக்களை நல்வழி நடத்திச் செல்வதில் அன்றும், இன்றும், என்றும் பொருந்தக் கூடிய நிலைமையில் அமைந்திருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுவதே இந்த நூலின் நோக்கம். உதாரணமாக, அரசாங்கத்தின் மது விலக்கு கொள்கை பற்றியும், மது அருந்துவதால் ஏற்படும் கெடுதல்களையும், இந்த நூற்றாண்டின் மேதைகளான காந்திஜி, ராஜாஜி, அறிஞர் அண்ணா போன்றோர்களின் அறிவுரைகளையும், பிரச்சாரங்களையும், அன்றே சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன் நமது கம்பநாடுடைய வள்ளல் தனது காவியத்தில் சுக்கிரீவன் வாயிலாக மதுப் பழக்கத்தின் கெடுதல்களை கூறுவது போல் அமைத்துக் காட்டியிருக்கிறார். இதுபோல், மக்களின் லட்சிய வாழ்க்கை முறையையும், ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர்ந்த தத்துவத்தையும், இன்னும் அநேக ஒப்பற்ற கம்பன் கருத்துக்களும் இந்தப் புத்தகத்தில் இடம் பெறுகின்றன.

ஸ்ரீ ஐயரின் தமிழ்த் தொண்டு

தமிழ்

1. கம்பராமாயணச் சுருக்கம்
2. புக்கர் வாஷிங்டன் சரித்திரம்
3. சந்திரகுப்த சக்கரவர்த்தி சரித்திரம்
4. குருகோவிந்த சிங்கன்
5. கரிபால்டி சரித்திரம்
6. மாஜினி சரித்திரம்
7. மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள்
8. பிரயோக இலக்கணம்
9. அகஸ்தீன் முனிவரின் விண்ணப்பம்

ஆங்கிலம்

1. **The Kural or Maxims of Thiruvalluvar.**
2. **Kambaramayanam** — *A Study*
   (Published by Bharathia Vidya Bhavan, Bombay)
3. **Kurunthogai.**